6-வது

# இசை விழா

1977

இந்து கலைஞர் மன்றம் • இன்பமே நிலையின்பம் •

31-7-77 – 9-8-77



# சமர்ப்பணம்

திவ்ய ஜீவன சங்க ஸ்தாபகரான

சுவாமீ சிவானந்த மகராஜ் அவர்களுக்கு

(ரிஷிகேசம், ஹிமாலயா)

இம் மலரினைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

இளங் கலைஞர்களின் முன்னேற்றத்தையும்,

6-ம் ஆண்டு இசைவிழா வெற்றி பெறவும்

வாழ்த்துகிறோம்.

# நியூ விக்ரேஸ்

றெக்கோடிங் (B)பார் அன்ட்
றிவைண்டேர்ஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

☎ 7349

இலங்கை

# இளங் கலைஞர் மன்றம்

வழங்கும்

## 6-வது

# இசை விழா

★

இடம்: யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபம்

காலம்: 31-7-77 — 9-8-77

★

அனைவரையும்

அன்புடன் அழைக்கின்றோம்.

வணக்கம்.

இங்ஙனம்,

ஷை மன்றத்தினர்

# Kalam Hardwares

(DIRECT IMPORTER)

**Dealer in :**

**HARDWARE, BRASWARE & ALL KINDS OF PAINT MOTOR CARS & FURNITURE UPHOLSTEERY MATERIALS & HOOD LINING ETC.**

கலாம் ஹாட்வெயர்ஸ்
யாழ்ப்பாணம்

104, Stanley Road,
JANFFA.

☎ 325

# DYNAMOTOR WINDERS

**3, Kamal Lane, Jaffna.**

Prop : K. MAHADEVAN

Specialists in :

**INSTALLATION, REPAIRING, REWINDING.**

Undertakes rewinding and repairing of:

**Dynamos, Motors, Transformers, Alternators, Fans, E. Water Pumps, & all kinds of Electrical Apparatus Etc.**

# “ இளங் கலைஞர் மன்றம் ”

இலங்கை.

## மன்ற கீதம்

இராகம்: யமன் கல்யாண
தாளம்: ஆதி

இயற்றியவர்,
இயலிசை வாரிதி, யாழ்ப்பாணம்,
N. வீரமணி

பல்லவி

ஆனந்த கீதமே பாடுவோம் — எங்கள்
ஏழிசை செழிக்க நம் நாட்டிலே

சரணங்கள்

ஞானந்தனிலே தமிழ்க் கானமுஞ் செழிக்க
ஞானந்தனை வளர்த்து யாவரும் ரசிக்க
கானந்தனையே இளங்கலைஞர்கள் பாடி
ஆர்வமுடனே நாடி சீர்பெறும் மன்றம் கூடி
(ஆனந்த கீதமே)

இளங்கலைஞர் உள்ளத்தில் இன்பக் கலைச்சுடரை
ஏற்றி வைத்தே ஒளிரப் போற்றி செய்திடுவோம்
விளங்கு மிளங்கலைஞர் இலங்கிடச் சேவை
இலங்கை மாநகரில் துலங்கிடவே புரிந்து
(ஆனந்த கீதமே)

ஈழத்திருநாட்டிலே இளங்கலைஞர் மன்றம்
வாழி பல்லாண்டென வாழ்த் தொலி பாடி
ஆழத் தமிழ்க்கடலில் அழகிசை முத்தெடுத்து
அன்னை கலைவாணிக்கு ஆரமாய்ச் சூட்டிடவே
(ஆனந்த கீதமே)

*Please Visit Us for your Requirements of:*

Milk Foods, Toilet, Fancy & Sports Goods, Glass, Enamel, Plastic and Aluminium Wares, Rice Hullers, Grinders & Spare Parts. Electric Motors & Electric Accessories, All kinds of Essences & Food Colours, Fancy Book & Presentation Goods, and Sundry Goods Etc., Etc.

★ RAJU STORES ★

"RAJU BUILDING"

67, 69, Kasthuriar Road,

P. O. Box 64

JAFFNA.

☎ 372

Grams: RAJU

With the best Compliments of:

# Ganeshananda Stores

244, [462] HOSPITAL ROAD,

**Jaffna.**

Dealers in: TIMBER, FURNITURE, HOUSEHOLD UTENSILS, TILES, & TRANSPORT AGENTS.

T'PHONE: 427

Prop: V. SUNDARAMPILLAI

" கலையின்பமே நிலையின்பமாம் "

# இளங் கலைஞர் மன்றம்

இலங்கை.

காப்பாளர்கள் :

தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
நீதிவான், K. ஞானச்சந்திரன்
உயர்திரு. ராம குமாரசாமி (Dip. in Music)
பேராசிரியர், க. கைலாசபதி (தலைவர், யாழ் வளாகம்)
வைத்தியகலாநிதி, N. சுப்பிரமணியம்
டாக்டர், T. கெங்காதரன்
பேராசிரியர், க. இந்திரபாலா (விரிவுரையாளர், யாழ் வளாகம்)
சங்கீதபூஷணம், A. S. இராமநாதன்
உயர்திரு. C. சத்தியமூர்த்தி (அதிபர், மீனாட்சி வர்த்தகக் கல்லூரி)
நாதஸ்வரச் சக்கரவர்த்தி, N. K. பத்மநாதன்
கலாநிதி, அ. சண்முகதாஸ் (விரிவுரையாளர், யாழ் வளாகம்)
தர்மபூஷணம், சி. சின்னத்துரை
சிவநெறிச்காவலர், க. கனகராசா (மில்க்வைற் உரிமையாளர்)
உயர்திரு. S. தியாகராசா (S. T. R. பிலிம்ஸ்)
உயர்திரு. மு. யு. அ. கலாம் (உரிமையாளர், கலாம் ஹாட்வெயர்ஸ்)
சட்டத்தரணி, S. கனகரட்ணம்
பொறியியலாளர், E. வைத்திலிங்கம்
சிவத்தமிழ்ச்செல்வி, செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
திருமதி. அருணாசலம் (அதிபர், இராமநாதன் நுண்கலைக் கல்லூரி)

ஆலோசகர்கள் :

வழக்கறிஞர், K. V. S. சண்முகநாதன்
டாக்டர், T. சிவராசா
திரு. D. பத்மநாதன்

செயற்குழுவினர் :

| | |
|---|---|
| தலைவர் : | பொன். சுந்தரலிங்கம் |
| துணைத்தலைவர் : | யோகாம்பிகை செல்லையாபிள்ளை |
| இணைச் செயலாளர்கள் : | தனதேவி சுப்பையா |
| | கமலமனோகரி குமாரசாமி |
| பொருளாளர் : | சு. பாலசண்முகநாதன் |
| விழாக்குழுத் தலைவர் : | ஐ. வேலாயுதபிள்ளை |
| விழாக்குழு இணைச்செயலாளர்கள் : | நவமணி நாகலிங்கம் |
| | ஜெயமணிதேவி ஐயாத்துரை |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| க. கேசவன் | கெங்காதேவி தியாகலிங்கம் |
| எஸ். தங்கராஜா | பாக்கியலெட்சுமி நடராசா |
| எம். வாமதேவன் | வரதவாணி கந்தையா |
| சு. மகாலிங்கசிவம் | சக்திதேவி குருநாதபிள்ளை |
| வே. சுந்தரலிங்கம் | கலைவாணி கந்தையா |
| சி. மாணிக்கராஜா | கல்யாணி சுந்தரலிங்கம் |
| ச. லோகேஸ்வரன் | தயாளினி இரத்தினம் |
| ச. ஜெயச்சந்திரன் | ஈஸ்வரி அம்பலவாணர் |
| வி. ஜம்புநாதன் | |

Phone: 531 Grams: "ENEMES"

# N. M. SULTAN MOHIDEEN HADJIAR & Bro.

*Dealers in:*

★ FANCY GOODS

★ PRESENTATION ARTICLES

★ SUNDRIES

★ STAINLESS STEEL WARES

★ GLASS

★ ENAMEL & ALUMINIUM WARES

★ STATIONERY GROCERIES

★ OILMANS ETC., ETC.

123, 125, 143, K. K. S. ROAD,
JAFFNA.

No. 2, New Market,
Hospital Road, Jaffna.

## ஆசிச்செய்தி !

**K. V. நவரத்தினம்**
யாழ். நீதிபதி

இளங்கலைஞர் மன்றத்தின் 6வது ஆண்டு இசைவிழா 31-7-77 தொடக்கம் 10 தினங்கள் நடைபெறுவதையிட்டுப் பேருவகை கொள்வதுடன், அவர்களால் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் இளங் கலைஞர்களுக்கென அவர்களை ஊக்குவிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட மன்றம் இதுவொன்றேயாகும். குறுகிய காலத்தில் எண்ணற்ற இளங் கலைஞர்கள் பயனடைவதோடு, மேலும் இளைஞர்கள் பயனடைவதற்கு இம் மன்றம் முயன்று வருகின்றது. இம் மன்றத்தில் துடிப்புள்ள பல இளைஞர்கள் சேவையாற்றிவந்தாலும், அவர்களுடன் சேர்ந்து பல பெண் பிள்ளைகள் செயலாற்றி வருவது போற்றத்தக்கது. இம் மன்றம் மேலும் வளர்ச்சிபெற சகல பெற்றோர்களும் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**K. V. நவரத்தினம்**



## வாழ்த்து.

**கலாநிதி, க. கைலாசபதி**
தலைவர், யாழ். வளாகம்

இலங்கை இளங் கலைஞர் மன்றம் ஆறுவது வருடாந்த இசைவிழாவை நடத்துவதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். இதுவரை ஐந்து ஆண்டு விழாக்களையே நடத்தியுள்ளபோதும், ஈழத்துக் கலையுலகிலே மன்றத்துக்குத் தனிப் பெயரும், மதிப்பும் இருப்பதை அறிவேன். இலட்சிய வேட்கையும், அயராத உழைப்புமே இவ் வெற்றிக்குக் காரணமாகும்.

இன்றைய உலகில் எங்கு நோக்கினும் இளைஞரின் எழுச்சியும், இயக்கங்களும் காணப்படுகின்றன. இவர்களது மாபெரும் ஆற்றலை ஆக்கபூர்வமான வழிகளிற் செலுத்துவது அரசினதும் ஏனைய நிறுவனங்களினதும் அதிமுக்கிய கடமையாகும். இளங் கலைஞர் மன்றம் இத் துறையில் உழைத்து வருதல் நமது பாராட்டுக்குரியது. ஒற்றுமையுடன் உருப்படியாகப் பணியாற்றிவருதல் அரிய விஷயமாகும். ஆறுவது ஆண்டு இசைவிழா சிறப்புடன் நடந்தேற வாழ்த்துகிறேன்.

**க. கைலாசபதி**

கலை வளர எமது வாழ்த்துக்கள் !

## ஆபரணத் தொழிலாளர்
## கூட்டுறவுச் சங்கம்

( மட்டுப்படுத்தப்பட்டது )

பதிவு இல. யா/1635.

290, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் :

ஆபரணத் தொழிலாளர்களுக்குரிய ஆயுத உபகரணங்கள் சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ ஓடர் நகைகளும் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

*With the best Compliments of:*



# MALAYAN CAFE

**36, 38, Grand Bazaar, Jaffna.**

# வாழ்த்துகிறோம்!

வளரும் இளங்கலைஞர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் முன்னேற்றமடைவதற்கு வழிவகை செய்யத் தோன்றிய அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஆறுவது ஆண்டு இசைப் பெருவிழா வெகுசிறப்புடன் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்வெய்துகிறோம்.

இளங் கலைஞர் மன்றம் செவ்வனே செயற்பட்டுத் திறம்பட இயங்க அயராது உழைக்கும் உறுப்பினர்களும், குறிப்பாக மன்றத் தலைவர் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களும் மிகவும் பாரரட்டப்படவேண்டியவர்கள் என்றால் அது மிகையாகாது.

நல்லிசைத் தொண்டு செய்து நாளும் புகழ் பரப்பிவரும் அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம் மேன்மேலும் வளர்க, வாழ்கவென மனமார வாழ்த்துகிறோம்.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்
யாழ்ப்பாணம்.

28-7-77

# ஆசியுரை

W. S. செந்தில்நாதன்
சட்டத்தரணி,
(செயலாளர், யாழ். நுண்கலைக்கழகம்)

இலங்கை இளங் கலைஞர் மன்றம் தனது ஆறுவது ஆண்டுவிழாவைக் கொண்டாடுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன். இளங் கலைஞர் மன்றமாயிருந்தும், இளங் கலைஞரை மட்டுமல்லாமல், முது கலைஞரையும் ஊக்குவிக்கும் பெருமையுடைத்து இம்மன்றம். மேலும் ஆண்டுதோறும் இசைப் போட்டிகளை நடாத்திப் புலமை பெற்றோருக்குப் பதக்கங்களையும் வழங்குவதன்மூலம் இம்மன்றம் இளங் கலைஞர்களுக்கு ஒரு பெரும் சேவை செய்கிறது.

பல்லாண்டுகளாக இம்மன்றம் இச் சேவையைத் தொடர்ந்து செய்ய எனது சார்பிலும், யாழ். நுண்கலை மன்றத்தின் சார்பிலும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

W. S. செந்தில்நாதன்

*Space Donated By :*

**A. K. S. SONS**

**JEWELLERS**


**Kannathiddy, JAFFNA.**

☎ 519

## மன்றம் நடாத்திய இசைப் போட்டிக்கு பரிசில்கள், தங்கப் பதக்கங்கள் வழங்கியோர்.




திரு. ஐ. பொன்னுத்துரை அவர்கள்
(உரிமையாளர்,
சமலா சுராஜ் அன் இன்டஸ்றீஸ்
யாழப்பாணம்)



திரு. மு. யூ. அ. கலாம் அவர்கள்
(உரிமையாளர், கலாம் ஹாட்வெயர்ஸ்,
யாழ்ப்பாணம்)

**A. K. S.** நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



திரு. செ. சத்தியமூர்த்தி அவர்கள்
(அதிபர், மீனாட்சி வர்த்தகக் கல்லூரி
கொட்டடி, யாழ்ப்பாணம்)



திரு. M. ஜெகதீசன் அவர்கள்
(உரிமையாளர், தீசா ரொய்ஸ் இன்டஸ்றீஸ்
யாழ்ப்பாணம்)



திரு. M. மகாரெட்ணம் அவர்கள்
(பொறியியலாளர், கலட்டி – யாழ்ப்பாணம்)



திரு. W. S. செந்தில்நாதன் அவர்கள்
(சட்டத்தரணி, யாழ்ப்பாணம்)

திரு. S. மகேந்திரன் அவர்கள்
(Peninsula Glass Works & Industries, Jaffna)

திரு. K. மகாதேவா அவர்கள்
(உரிமையாளர், டைனமோட்டர் வைண்டர்
யாழ்ப்பாணம்)



திரு. V. M. சண்முகம் அவர்கள்
(பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம்)



காலஞ்சென்ற T. செல்வரட்ணம் அவர்கள்
ஞாபகார்த்தமாக
வழங்கியவர்: மகன் S. இராகவன் அவர்கள்
(வங்கி முகாமையாளர், இலுப்பைக்கடவை)



திரு. K. S. முத்தையா அவர்கள்
(Inspector, C. S. Alvai)



திரு. S. தியாகராஜா அவர்கள்
(S. T. R. பிலிம்ஸ், யாழ்ப்பாணம்)

திரு. V. M. கணபதிப்பிள்ளை அவர்கள்
(பிரபல வர்த்தகர், சாவகச்சேரி)

திரு. S. நாகராஜா அவர்கள்
(பிரபல வர்த்தகர், தபால் நிலைய வீதி, சாவகச்சேரி)



நெடுந்தீவு, காலஞ்சென்ற அதிபர்
நா. வேலுப்பிள்ளை அவர்கள் ஞாபகார்த்தமாக
வழங்கியவர்: சங்கீதபூஷணம் வே. சுந்தரலிங்கம்,
பொறியியலாளர் வே. இராசலிங்கம் (லண்டன்)



டாக்டர், E. குகராஜன் அவர்கள்
(நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)



திருமதி, லீலா ஆறுமுகையா அவர்கள்
(நடன ஆசிரியை-யாழ்ப்பாணம்)



செல்வி, க. கனகநாயகி அவர்கள்
(இசை ஆசிரியை - மீசாலை)

டாக்டர், V. செல்லத்துரை அவர்கள்
சேர். பொன் இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

திரு. S. பிரான்சிஸ் சேவியர் அவர்கள்
சேவி கிளாஸ் தொழிற்சாலை, நீர்வேலி.



திருமதி, ராஜகுமாரி சின்னப்பு அவர்கள்
(ஆனந்தஜோதி வைத்தியசாலை, சாவகச்சேரி)



செல்வி, பத்மினி நமசிவாயம்
(சங்கீத வித்துவான், சண்டிலிப்பாய்)



திரு. K. தவராஜா அவர்கள்
(லக்ஷ்மி அரிசி ஆலே, நெல்லியடி)



டாக்டர், T. கெங்காதரன் அவர்கள்
(வண்ணுர்பண்ணே, யாழ்ப்பாணம்)

இசையாசிரியை,
செல்வி, கௌரிமனோஹரி குமாரசாமி அவர்கள்
(ஆனேக்கோட்டை)

திரு. சி. நவரட்ணம் அவர்கள்
(நெசவு நிலைய அதிபர், டச்சு வீதி, சாவகச்சேரி)

திரு., திருமதி, M. T. சுப்பிரமணியம் அவர்கள்
(பிரபல வர்த்தகர், மீசாலே)

அதிபர், பிரம்மஸ்ரீ சி. சிவசரவணபவன் அவர்கள்
( உசன், மிருசுவில்)

நன்மை விரும்பி



எமது மன்றத்தால் வெளியிடப்படும்
இம்மலரின் முதற் பிரதியை

இளங்கலைஞர் வளர்ச்சியில் இணையற்ற ஆர்வமுடையவரும்,
பிரபல வர்த்தகரும், சமூகத் தொண்டனுமாகிய

## திரு. K. தவராஜா அவர்கள்

( உரிமையாளர், லக்ஷ்மி அரிசி ஆலை - நெல்லியடி )

பெற்றுக் கொள்கிறார்கள்.

*With the best Compliments of :*



**MINI POWER LTD.**

Manufacturers of

M. P. L. & MINI PUMPS.

**Jaffna.**

தரமான சிற்றுண்டி வகைகளுக்கும்

பாண் ★ பணிஸ் ★ கேக் வகைகளுக்கும்

குளிர்பான வகைகளுக்கும்

— இன்றே விஜயம் செய்யுங்கள். —

ஹோட்டல் வூட்லன்ஸ் அன் பேக்கவுஸ்

பருத்தித்துறை வீதி,

நல்லூர்ச் சந்தை, யாழ்ப்பாணம்.

RADIOS PATHY



40, Kasturiar Road, JAFFNA.

FOR GUARANTEED REPAIRS OF RADIOS,

TAPE RECORDERS, CLOCKS, WATCHES

& ELECTRICAL APPLIANCES.

மன்றம் நடாத்திய அகில இலங்கை இசைப் போட்டியில் பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்ற இளங் கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம், வெற்றிக்கேடயம், வெற்றிக்கிண்ணம் பரிசில்களாக வழங்கப்படுகின்றது.

## வாய்ப்பாட்டு கீழ்ப்பிரிவு



ராதா பாலசிங்கம்
(முதலாம் இடம்)




மேனகா சுப்பிரமணியம்
(இரண்டாம் இடம்)



சத்தியகலா திருநாவுக்கரசு
(மூன்றும் இடம்)

## வாய்ப்பாட்டு மத்தியபிரிவு



பராசக்தி சிவலிங்கம்
(முதலாம் இடம்)

நர்மதா ஐயாக்கண்ணுதேசிகர்
(இரண்டாம் இடம்)



வசந்தா அருணாசலம்
(மூன்றாம் இடம்)

## வாய்ப்பாட்டு மேற்பிரிவு



கமலமனோகரி குமாரசாமி
(முதலாம் இடம்)



உதயராணி குமாரசிங்கம்
(இரண்டாம் இடம்)

கோசலை முத்தையா
(மூன்றாம் இடம்)

## வயலின் கீழ்ப்பிரிவு



பிரபா தம்பிராசா
(முதலாம் இடம்)



பாக்கியராசா கண்ணன்
(இரண்டாம் இடம்)



றீற்று நேசமலர் செல்லையா
(மூன்றும் இடம்)

## வயலின் மத்தியபிரிவு

ஐயாக்கண்ணுதேசிகர் ஞானசுந்தரம்
(இரண்டாம் இடம்)



உருத்திராபதி சந்தானக்கிருஷ்ணன்
(முதலாம் இடம்)



கலாவதி சதாசிவம்
(மூன்றாம் இடம்)

## வயலின் மேற்பிரிவு



தங்கராணி விஞசித்தம்பி
(முதலாம் இடம்)



சிவசுந்தரி நமசிவாயம்
(இரண்டாம் இடம்)

ஜானகி செல்வரட்ணம்
(மூன்றாம் இடம்)

## வீணை கீழ்ப்பிரிவு



ஷீலாதேவி சங்கரன்
(முதலாம் இடம்)




சிவபாலன் இரவீந்திரன்
(இரண்டாம் இடம்)

வத்ஸலா சோமசுந்தரஐயர்
(மூன்றாம் இடம்)

## வீணை மத்தியபிரிவு



சிவானுஜா கனகசபாபதி
(முதலாம் இடம்)

நளினி அரசரட்ணம்
(மூன்றாம் இடம்)

## மிருதங்கம் கீழ்ப்பிரிவு



ராஜலிங்கம் ராஜீவன்
(முதலாம் இடம்)

மைத்திரேயி நவரட்ணம்
(இரண்டாம் இடம்)

தியாகராஜ ஐயர் ரவிச்சந்தர்
(மூன்றாம் இடம்)

## மிருதங்கம் மத்தியபிரிவு



துரைராஜசிங்கம் இராஜன்
(முதலாம் இடம்)

பரமானந்தம் பகீரதன்
(இரண்டாம் இடம்)

மீனலோஜினி வீரசிங்கம்
(மூன்றாம் இடம்)

# ஆட்டுகின்றார் ஆடுகின்றோம்

செ. சத்தியமூர்த்தி
அதிபர், மீனாட்சி வர்த்தகக் கல்லூரி

(இந்த ஆண்டு 'இளங் கலைஞர் மன்றம்' ஒவவொரு ஆண்டும் சிறப்புற நடாத்தி வந்த 'இசைவிழாவைப்'போல் இவ்வாண்டும் இப் பெருவிழாவைக் கொண்டாடுமுகமாக வெளிவரவிருக்கும் மலருக்கு, மன்றத்தின் தலைவரும், இளங் கலைஞர்களின் முன்னேற்றத்தில் பெருநாட்டம் கொண்டவரும், என் அருமை நண்பருமான திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்கள் ஒரு கட்டுரை தரும்படி கேட்டார்கள். ''இசைவிழா'' மலருக்கு இசையோடு சம்பந்தப் பட்ட கருத்துக்களடங்கிய கட்டுரையைக் கொடுப்பதே சிறப்புடையதாகும். இருப்பினும், பலர் இசையோடு இசைந்த கட்டுரைகளைக் கொடுத்திருப்பார் என்ற நம்பிக்கையில் ''பண''ணும் இசைக்கு சம்பந்தமுடையது. அத்துடன் ஆடலும் இசையோடு சம்பந்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் ஆதிகர்த்தா ''தில்லைக்கூத்தன்'' அவனே எம்மையெல்லாம் ஆடவைப்பவன். அவன் புகழை இக் கட்டுரைமூலம் கூறி ''இளங் கலைஞர் மன்றத்தினரை'' வாழ்த்து கின்றேன்.

— ஆசிரியர்

''மணவன் காண்மலை யாள்நெடு மங்கலக்
கணவன் காண்கலை ஞானிகள் காதலெண்
குணவன் காண்குரங் காடுதுறை தனில்
அணவன் காண்அன்பு செய்யு மடியார்க்கே''

உலக அரங்கில் ஆண்டவனின் திருவுளப்பாங்கின் வண்ணம் நாமெல்லாம் நிற்கிறோம் - நடக்கிறோம் — எழுதுகிறோம் — இருக்கிறோம். நம்மை இறைவன் வினைகள் என்கிற கயிற்றால் கட்டி ஆட்டுகின்றான். அதற்கேற்ப நாம் ஆடுகின்றோம்.

அண்டகோடிகளை ஆட்டிப்படைத்து விளையாடுகின்ற ஆண்டவன் எப்படிப்பட்டவன்? இதோ! நாவுக்கரசர் சொல்லும் நன்மொழிகளைக் கேளுங்கள்.

அவன் மணவாளன். மலைமகளின் மங்கலத்தைக் காத்துவரும் கணவன். கலை ஞானிகளால் காதல் செய்யப்படும் குணவன். அன்பு செய்யும் அடியவர்களுக்கு அணவன் என்று விளக்கம் தருகிறார். தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், இயற்கை உணர்வினன் ஆதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, முற்றுமுணர்தல் என்ற எட்டுக் குணங்களையும் கொண்டவன் என்பதனை வள்ளுவரும் விளக்கிச் சொல்வார்.

''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

'எண்குணத்தான்' — என்ற தொடருக்குப் பரிமேலழகர் தரும் விளக்கமே நாம் மேலே சொன்னது.

## உள்ளத்தின் உறுதி:

கூட்டுவதும் கூட்டிப் பிரிப்பதுவும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும் காட்டுவதும்
காட்டி மறைப்பதுவுங் கண்ணுதலோன் முன்னமைத்த
ஏட்டின் படியென் றிரு.

உலகமெல்லாம் ஆண்டவனின் கட்டளைப்படியே இயங்குகிறது. இதனை நன்கு உணர்ந்தவர்கள் நமது சமயச் சான்றோர்கள். மலையே வந்து விழுந்தாலும் நிலையில் நடுக்கமிருக்கக்கூடாது.

நிலக்கரிக்கு மேலும் மேலும் ஏற்படும் அழுத்தமே பிரகாசத்தைக் கொடுக்கும்: படிப்படியாக ஏற்படும் அனுபவங்களே ஒருவனை விளக்குமுறச் செய்யும்.

ஆற்றின் போக்கிலே நீந்துபவனைவிட எதிர்த்து நீந்துபவனே போற்றுதலுக்குரியவனாகின்றான்.

## ஆட்டுகின்றான் :

"எதிர்ப்புச் சக்திகள் என்னைப் படுபாதாளத்தில் தள்ளப்பார்த்தன. ஆனால் அவற்றைக்கொண்டே நான் வானளாவ உயர்ந்துவிட்டேன்" என்கிறார் ஆங்கில நாட்டு அறிஞர் பெர்னாட்ஷா.

இவருடைய கருத்தின் விளக்கமாக அமைகின்றார் 'அப்பர் பெருமான்.' எதிர்ப்புச் சக்திகளின் அழுத்தத்தால் புகழ் விளக்கம் பெற்றவர் திருநாவுக்கரசப் பெருந்தகையார். அவர் பெற்ற அனுபவங்களெல்லாம் இனிய தமிழ்ப் பாக்களாக மலர்ந்தன. துளக்கமில் மன ஊக்கமே துன்பங்களைத் துடைத்து வாழ்வை ஒளிபெறச் செய்கிறது.

## ஆக்கையாற் பயனேன் :

அழியும் இந்த உடலால் அழியாத அருளைப்பெற அப்பர் பெருமான் வழி கூறுகின்றார். தலைமுதல் கால்வரை முழு உருவத்துடன் நம்மைப் படைத்த முக்கண்ணனுக்கு நாம் எப்படி நன்றியைத் தெரிவிப்பது? வழி உண்டு! அதுவே ஆக்கையின் பயன்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே"

நெடுங்காலம் சென்ற பிறகு தன் வாழ்க்கையைச் சற்றுத் திரும்பிப் பார்க்கிறார். எப்படியெல்லாம் தன்னை இறைவன் சோதனை செய்தான் என்று எண்ணிப் பாடுகிறார்.

"ஆட்டி னான்முனை அமணரோ டென்றனைப்
பாட்டி னான்றன பொன்னடிக் கின்னிசை
வீட்டி னான்வினை மெய்யடி யாரொடும்
கூட்டி னான்குரங் காடு துறையனே"

ஈறிலா இறைவன் என்னை முன் அமணரோடு ஆட்டினான். பின் தன்னுடைய பொன்னடிகளை என்னைக்கொண்டு பாட்டினான். (பாடுவித்தான்) என்னுடைய வினைகளை நீக்கினான். மெய்யடியார் குழாத்தொடு என்னைக் கூட்டினான் என்று பலபடக் கூறுகிறார் பெருந்தகை நாவுக்கரசர்.

## மட நெஞ்சம் :

வினை தடுத்தாண்ட வேதியனுக்கு நெஞ்சமே! நீ என்ன கைம்மாறு செய்யப் போகிறாய் என்று கேட்கிறார் பிறிதோரிடத்தில்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்று வள்ளுவர் பெருமான் கூறுவது கடுப்பப் பற்றை நீக்கிய பரம்பொருளைப் பாடுகிறார். இதன்மூலம் தனது நன்றியுணர்வை நன்கு புலப்படுத்துகிறார்.

''ஆட்டினாய் அடியேன் வினை யாயின
ஓட்டி னாயொரு காதி விலங்குவெண்
தோட்டி னாயென்று சோற்றுத் துறையர்க்கே
நீட்டி நீபணி செய்மட நெஞ்சமே''

இவ்வாறெல்லாம் ஆண்டவனின் திருவிளையாடல்களை நேராக அநுபவித்தவர் அப்பர் பெருமான். ஆகவே அனுபவம் முதிர்ந்த திருநாவுக்கரசப் பெருந்தகையார் உலகத்தாருக்குக் கூறுகிறார்.

''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . .
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே''

இதுவே நாவுக்கரசர் மூலம் நாமறிந்தது. அப்பர் பெருமானின் அருள்வாக்கை உணர்ந்து நாம் அமைதியடைவோமாக.

## Nayanmarkaddu

# MEDICAL CLINIC & SURGERY

(Estd. 1838)

**No. 189, WOLFENDHAL STREET,**
**COLOMBO - 13**

DR. E. KUGARAJAN. *(Fracture Specialist)*

தலைமை ஸ்தாபனம் :

## நாயன்மார்கட்டு வைத்திய நிலையம்

**செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.**

***Space Donated by:***

# V. K. Rajaratnam

**K. K. SANGARAPILLAI BUILDING,**

95, STANLEY ROAD, JAFFNA.

Phone: 7447

# இசை

## நாலுபேர் சொன்னபடி ....

முல்லைமணி, வே, சுப்பிரமணியம்

நாலுபேர் சொன்னபடி நாம் நடக்க வேண்டும் என்று கூறுவார்கள். இசையின் மகத்துவம் பற்றி யார் யாரோ எல்லாம் விரித்துக் கூறியுள்ளனர். இசை மனிதனை மட்டுமன்றி விலங்குகளையும், தாவரங்களையும் கூட அடிமைப்படுத்துகின்றதென்று கூறுவர். 'வேய்ங்குழல் இசையால் கண்ணபிரான் மந்தைகளைப் பரவசப்படுத்தினார்' எனப் புராணங்கள் கூறுகின்றன. வண்டுகளின் ரீங்காரம் மலரைப் பூரணமாக விரியச் செய்கிறது. 'இசையின் உதவியால் தாவரங்களின் வளர்ச்சி வீதம் கூடுகின்றது' என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. இசை ஆன்மாக்களை இறைவனுடன் இசைவிப்பது. நாளும் இன்னிசையால் நற்றமிழ்ப் பக்திப் பாடல்களைப் பாடி முத்தியடைந்த நான்கு நாயன்மார்களதும் இசையனுபவங்களை நாம் பார்ப்போம்.

'மூன்று வயதிலே வாசகம் சொன்ன' ஞானசம்பந்தப் பிள்ளையார் தாம் இறைவனை வணங்கும் முறையைக் கூறுகின்றார்.

சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்

இயற்கையாக அமைந்த சோலையின் மத்தியிலே ஒரு கோவில். பெண்கள் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு ஆலயத்தை வலம் வருகின்றனர். பல்வேறு இசைக் கருவிகளையும் இசைக்கின்றார்கள். முழவு என்னும் வாத்தியக் கருவியின் ஓசை கேட்கிறது. மரத்திலே இருந்த மந்திகள் அச்சம் அடைகின்றன. இடி இடிக்கிறதோ என்ற சந்தேகம். சந்தேகத்தைத் தீர்க்கத்தானே வேண்டும்? அடர்த்தியான சோலை; எட்டி எட்டிப் பார்க்கின்றன; வானத்தைப் பார்க்க முடியவில்லை. மரத்தின் உச்சிக்கு ஏறி மழை முகிலைப் பார்க்கின்றன. இப்படி ஒரு காட்சியைக் காட்டுகிறார் சம்பந்தர்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வான் அமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழுவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே.

அப்பர் சுவாமிகளைச் சுண்ணாம்பறையில் இடுகின்றனர். ''சமண சமயத்திலே சேர்ந்து கருமசேனர் என்னும் பெயருடன் சமண சமயக் குருவாகவே இருந்தவர் சூலைநோய் என்று சாட்டுச் சொல்லி சைவ சமயத்திற்கு மாறிவிட்டார்'' என்பது சமணரின் குற்றச்சாட்டு. நீற்றறையில் இட்டால் அவர் இறந்துவிடுவார் என்று நம்பினர். ஈசனின் இணையடிகளை இடையறாது சிந்தித்துக்கொண்டிருந்த அப்பரைச்

சுண்ணும்பறை என்ன செய்துவிட முடியும்? அது மிகவும் குளிர்மையாக, இனிமையாக இருக்கிறது. இனிமையான வீணையின் நாதத்தை அவர் பலமுறை கேட்டிருக்கிருர்; ரசித்திருக்கிருர். பரிச்சயமில்லாதவர் வீணையை வாசிக்கத் தொடங்கினுல் அபசுரம் பேசும். அது மாசுள்ள — குற்றமுள்ள வீணையொலியாகும்; அது இனிமை பயக்காது. குற்றமில்லாத வீணைகானத்துககு இணைதான் ஏது? ''அதற்கு ஈடிணையான பொருள் இருக்கிறது; ஈசனது இணையடி நிழல்தான் அது'' என்று பாடுகின்ருர் அப்பர்,

''மாசில் வீணையும் மாலை மதியமும்

... ... ... ... ...

ஈசன் எந்தை இணையடி நீழலே''

ஈசனின் இணையடி நீழல் மாசில் வீணையைப் போன்றிருக்கிறது என்று கூறும்போது நாவுக்கரசர் இசையை எவ்வளவு தூரம் ரசித்திருக்கிருர் என்பது புலனுகின்றது.

சுந்தரர், அப்பருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் பிந்தியவர். அப்பரும் ஆளுடைபிள்ளையும் சிறந்த பக்திப் பாவணர்கள் மாத்திரமன்றி இசை வல்லுநராகவும் திகழ்ந்ததைச் சுந்தரர் அறிவார். சுந்தரரும் இசையிலே ஈடுபாடுடையவர்தான். இனிமையாகப் பாடவல்லவர்தான்! ஆனுல் முன்னவர் இருவருக்கும் இணையாகத் தன்னுல் பாடமுடியவில்லையென்று கவலைகொள்கிருர். அப்பரதும் சம்பந்தரதும் பாடல்களை அடியவர் பாடக்கேட்டு இறைவன் மகிழ்ச்சியடைகிருன். ''எனக்கு இப்படிப் பாடமுடியவில்லையே என்னுள்ளமே கல்போல் இருக்கிறது, என்ருலும்கூட என் மனத்தைக் கசியச் செய்து தன்னிணையடிகளை எனக்குக் காட்டியுள்ளான்'' என்று மனமுருக நெஞ்சுருகப் பாடுகின்ருர் சுந்தரர்.

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
  கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானைத்
  தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்லியல் மனத்தைக் கசிவித்துக் கழலடி
  காட்டியென் களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கி நின்ருனை
  வலி வலந்தனில் வந்து கண்டேனே.

இன்னேரிடத்தில் பாடல்களைப் பண்ணுடன் பாடத் தெரியவில்லையே என வருந்துகின்ருர்.

''பாடுமா பாடிப் பரவுமாறறியேன்''

அடியவர்களுக்கு, தாம் இறைவன்மீது எவ்வளவுதான் அன்பு வைத்திருந்தாலும் திருப்தி ஏற்படுவதில்லை. மாணிக்கவாசகரும் உள்ளமுருகப் பாடியிருக்கிருர்; மனமுவந்து இறைவன் முன்னிலையில் ஆடியிருக்கிருர். இதெல்லாம் வெறும் நடிப்போ என்ற எண்ணம் அவருக்கு வருகிறது.

''நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்''

என்று பாடும் அவர் தன் நெஞ்சைப் பார்த்துக் கூறுகின்ருர்.

ஆடுகின்றிலைக் கூத்துடையான் கழற்
  கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை ..........

மணிவாசகப் பெருமான் திருவண்ணாமலைக்குப் போகிறார்; அங்கே கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு நோற்கிறார்கள். அதை அடிப்படையாகக்கொண்டு ''திருவெம்பாவை'' பாடுகின்றார். கன்னியர் அதிகாலையில் இறைவன் புகழ் பாடிக்கொண்டே ஒருவரையொருவர் எழுப்புகின்றனர்.

''இறைவன் தொடக்கமில்லாதவன்! முடிவும் இல்லாதவன்; சோதிமயமானவன். அவன் புகழை இனிய இசையுடன் பாடிக்கொண்டு வருகிறோம். எங்களுடைய பாடலைத் தூரத்திலே கேட்ட ஒரு தோழி உணர்ச்சிமயமாகிவிட்டாள். விம்மி விம்மி அழுகின்றாள்; மெய்மறந்து மலர்ப்படுக்கையிலிருந்து புரண்டு விழுந்து விடுகின்றாள். உள்ளம் நெக்குருகிக் கிடக்கிறாள்; இனியவள் எதற்கும் ஆகாள். இறைவன் புகழும், இசையும் இத்தனை சக்தி வாய்ந்தவை. ஆனால் நீயோ எங்களுடைய பாடலைக் கேட்டும் எழும்புகின்றாய் இல்லை. உனது செவி என்ன 'இரும்பாலே செம்பாலே' செய்திட்ட செவியோ?'' என்று கேட்பதாக மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

இவ்வாறு நால்வரும் இசையின் மேன்மையை எடுத்துக் கூறுவதுடன் இறைவனை அடைவதற்கு இசையையே கருவியாகக் கொண்டனர். இசை மானிடர்க்கு எல்லையில்லா இன்பத்தை அளிப்பதுடன் உள்ளத்தைப் பண்படுத்த உதவுவதோடு இறையன்பைப் பெறுவதற்கும், இறைவனையடைவதற்கும் பயன்படுகின்றதென்பது வெளிப்படை.



With the best Compliments of :

# Devika Art Enterprise

MANUFACTURER OF SILK SCREENS & TEXTILE PRINTING.

Colombo Office :
No. 24, FLOWER ROAD,
COLOMBO - 7

T' Phone : 24073

Factory & Office :
No. 6, K. P. K. ROAD,
NALLUR - JAFFNA.

T' Phone : 218

T'Grams : "DEVIKA"

*Show Room :*
**No. 19, Model Market, JAFFNA.**

---

KMG

சகலவித கடைச்சல் வேலைகள், கேற்கிறில் வேலைகள்,
இயந்திர உதிரிப்பாகங்கள் புதுப்பித்தல்,
வாட்டர் பம் வண்டில், ட்ராக்ரர், என்ஜின்போட்
செய்து கொடுக்கப்படும்.

# கமலா கராஜ் அன் இண்டஸ்றீஸ்

53 (309), ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

போன் : 7652

# இசை வடிவமே உலகம்

குலனையூர், கு. விவேகானந்தன்

உலகம் உருண்டை வடிவானது. அது ஓசை வடிவானது. உலகத்திலுள்ள பஞ்ச பூதங்களும் ஒலியையுண்டாக்குகின்றன. கடலில், ஆகாயத்தில், நிலத்தில், நெருப்பில், காற்றில் ஓசையுண்டாவதை மக்கள் தம் எஃகுச் செவிகளால் கேட்டறிவார்கள். இறைவன் உலகம் முழுவதும் வியாபித்து பாலிற்படு நெய்போல் இருக்கின்றான். உலகம் ஓசையுள்ளதால் இறைவனும் ஒலியாக விளங்குகிறான். "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்பது திருமுறை. இசைக்கும், இறைவனுக்கும் பேதமில்லை. இசையும், இறைவனும் இரண்டன்று ஒன்றேயாகும்.

இதனாலன்றோ வெவ்வேறு சமயத்தவரும் தத்தம் கடவுளரை வணங்குவதற்கு இசைப்பாட்டை உபயோகிக்கின்றனர். இசையே இறைவன் என்பதை உணர்ந்த இந்துக்கள் தாம் வணங்கும் சிவபெருமான் இசைக் கருவியாகிய துடியையும், வைணவர் தாம் வணங்கும் கிருஷ்ணன் இசைக்கருவியாய குழலையும் கரங்களில் கொண்டார்கள் என்று கூறுவர்.

உயிர்களின் பிறப்பு இசைக்கருவியாகிய துடியிலிருந்தே உண்டாகிறது: இதனாலன்றோ "தோற்றம் துடியதனில்" என்று கூறுவர் பெரியோர். இசையைக் கேட்கும் உயிரினம் புலனொடுங்கப்பெற்று ஓசையின் வழியே உணர்ச்சிவசப்பட்டு நிற்கின்றன என்பதை, குறவரின் மகுடி என்னும் இசைப்பாட்டினால் தம் சீற்றமொழிந்து பாம்புகள் ஆடுவதையும், தாய்மாரின் தாலாட்டினிசையால் அழுத பிள்ளை அடங்கி நித்திரை செய்வதையும், பொப்பிசை பாடல் கேட்ட பொடியன்கள் தாமும் பொம்மலாட்டம் ஆடுவதையும் நாம் நேரில் காணலாம்.

இனி சிவபெருமான் உமாதேவியாரின் இசைப் பாட்டுக்கேற்க கொடுகொட்டி, பண்டரங்கம் என்னும் கூத்துக்களை ஆடி உலகம் நடைபெறச் செய்கிறார் என்று கலித்தொகை கடவுள் வாழ்த்தில் கூறப்படுகிறது. கண்ணன் தம் வேய்ங்குழல் ஓசையால் உயிரினங்களைத் தம்வசமிழக்கச்செய்து நல்வழிப்படுத்துவதாக வைணவர்கள் கூறுவர். இதுதானும் இசையின் பெருமை. உயிர் தங்குவதற்கேற்ற உடம்பானது தோல், இறைச்சி, இரத்தம், எலும்பு, மச்சை, நரம்பு, சுவேதநீர் ஆகிய ஏழு பொருட்களாலும் உண்டாக்சப்படுவதுபோல இசையும் சட்சம், நிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷதம் ஆகியவற்றின் ஆரோகண அவரோகணத்தால் உண்டாகிறதென்பர். இதனையே ச, ரி, க, ம, ப, த, நி எனச் சுருக்கமாகக் கூறுவர்.

நம்முன்னோர் இசையை உண்டாக்கும் பலவிதமான இசைக்கருவிகளை உபயோகித்தனர். அவை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி முதலியனவாகும். கேட்டோரை இசையச்செய்வதே இசையாகும். ஆதிகாலம்தொட்டு மனிதன் மகிழ்ச்சி, காதல், பிரிவு, துன்பம் போன்ற பலவகைப்பட்ட உணர்ச்சிகளை இசையின் மூலம் வெளிப்படுத்தினான். இத்தகைய உணர்ச்சிகளால் மனம் முற்றாக நொந்திருக்கும்

போது அவை அவனது வாயிலிருந்து இசை உருவில் வெளிப்பட்டு ஓரளவு சாந்தியை நல்கின.

அவ்விசையைக் கேட்டோர் மனத்திலும் அத்தகைய உணர்ச்சிகள் உண்டாகி அவன்மீது இரக்கத்தையும், அன்பையும், ஆதரவையும் பெருகச்செய்தன. இதனால் அவன் தன் துன்பம் நீங்கப்பெற்று இன்பம் பெறமுடிந்தது. இவ்வாறே ஒவ்வொருவரும் இசையினால் தத்தம் மனக்கவலை நீங்கப்பெற்று ஓரளவு சாந்தியடைகின்றனர்.

இவ்வாறு மன உணர்ச்சிகளை வெளிக்கொணரவும், மனச்சாந்தி பெறவும் இசை பயன்படுவதுடன், நாளாந்த வாழ்விலும் இடம்பெற்று சில சாதனைகளைச் செய்துவருகின்றது. சமய, சமூக விழாக்களிலும், போர்க்களத்திலும், ஆச்சிரமத்திலும் அதற்கு முக்கிய இடமுண்டு. அன்றியும் உடல் அப்பியாசங்கள், சர்க்கஸ் விளையாட்டுக்கள் ஆகியன நடைபெறும் இடங்களிலும் எழுச்சியை உண்டாக்குவதற்காக இசை உபயோகப்படுகிறது. இக் காலத்தில் பிரதானமாக விளம்பரம் செய்வதற்குக்கூட இசையை உபயோகிக்கிறார்கள். விளம்பர சங்கீதம் மக்கள் மனதைப் பெருமளவு கவர்ந்துள்ளது. இதனால் இசையின் தூயசக்தி மாசுபடுத்தப்படுகிறது. இசையினால் மனிதன் இன்பம் அனுபவித்தபோதிலும் அவன் நிலையான பேரின்பத்தைப் பெறவேண்டும். நம் முன்னோர்கள் இசையினால் பேரின்பம் பெற்றார்கள் என்று வரலாறு கூறுகின்றது.


*With the best Compliments of :*

**LUXMY VILAS**

205, K. K. S. ROAD,

JAFFNA.

*With the best Compliments of :*

# *Plastic Pachaging Company*

*262, Galle Road,*

*Colombo-3*

**POLYTHENE FILM AND BAGS.**

WITH THE BEST COMPLIMENTS FROM:

ATLAS

561, K. K. S. Road,
Vannarponnai,
JAFFNA.

CHEMICALS LIMITED

**VEL BRAND CAMPHOR TABLETS.**

நம்பிக்கை, நாணயம், நயம் மிக்க

தங்க, வைர நகைகளுக்குச்

சிறந்த இடம்

# கே. எஸ். இரத்தினம் அன் சன்ஸ்

நகை வியாபாரிகள்

36, ஆடியபாத வீதி, நல்லூர்ச் சந்தை,

யாழ்ப்பாணம்.

---

# Lakshmy Rice Mills

GOVERNMENT QUOTA HOLDER, RICE SUPPLIER

&

THAYANITHY TRANSPORT SERVICE.

PROP: K. THAVARAJAH

Residential Address:

LAKSHMY MOTORS
MAIN STREET,
NELLIADY, KARAVEDDI.

Official Address:

ALVAI SOUTH,
ALVAI.

உ

முருகன் துணை

# யான் கண்ட கி. வா. ஜ. ஐயா



பூவுலகில் யாண்டும் புன்முறுவலோடு இருப்பவர் மிகச்சிலர். அவர்களில் ஒருவர் ஸ்ரீ கி. வா. ஜ. ஐயா அவர்கள் ஆவர். அன்பர் அவர்கள் பிறந்தது சேலம் மாவட்டம் கிருஷ்ணராயபுரம், வளர்ந்தது மோகனூர். அங்கே வற்றாத வளம் பெருக்கும் காவிரி உண்டு. சிந்தையைத் தன்பால் ஈர்க்கும் முருகன் காந்தமலை உண்டு. இவருடைய சென்னை இல்லத்துக்கும் '' காந்தமலை '' என்றும் பெயர் உண்டு.

இவர் நெற்றியிலே தூய வெண்ணீறு உண்டு. கருணை பொழியும் கண்கள் உண்டு. உதட்டிலே இடையறாப் புன்முறுவல் உண்டு. மேனியை அழகுபடுத்த எளிய கதராடை உண்டு. முருகப்பெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சுண்டு. மேடையிலே ஏறிநின்றால் முருகனையும், குருநாதரையும் மறவாமல் அஞ்சலி செய்து அவர்கள் திருவடியை வணங்கும் பண்பு உண்டு. பேசத் தொடங்கினால் சொல்லிலே இனிமை உண்டு; கனிவு உண்டு; உயர்ந்த கருத்துண்டு. தமிழகம் மட்டுமன்றிக் கடல்கடந்த இடங்களுக்கும் சென்று சமயத்தையும், தமிழையும் பரப்பி வரும் சிறந்த தொண்டு உண்டு. நினைத்த மாத்திரத்தில் வாய் திறந்ததும் அழகான கவிகள் இயற்றும் ( பாடும் ) திறம் உண்டு. மனமொழி மெய்யால் ஒரு நெறிப்பட்டு நித்திரையிலும் தமிழன்னைக்கு தொண்டு செய்யும் உயர் கருத்து உண்டு. இவர் நல்லபல வளத்தோடு நெடிது வாழ வாழ்த்திய பல்லாயிரம் மக்கள் உண்டு: இப்போது வாயால் புலம்பும் பல மக்களில் யானும் ஒருவன் உண்டு.

என்னுடன் நாற்பத்தியிரண்டு ஆண்டுகளாகத் தொடர்புண்டு. நாற்பது முறைக்கு மேலாக இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். வரும்போதெல்லாம் எங்களூருக்கும் எங்கள் இல்லத்துக்கும் தவறாமல் வந்து ஒரு நாளாகுதல் தங்காமல் போகமாட்டார்கள். ஒரே ஒருமுறை இலங்கையரசின் அழைப்பின் பேரில் கொழும்பு மகாநாட்டுக்கு வந்து அரசினர் விருந்தினராகத் தங்கி, அவருடன் வந்த மற்றைய நண்பர்களுடன் உடன் திரும்ப வேண்டியதாயிற்று. அந்த ஒரு முறையே நம்மூருக்கு அவர்கள் வரவில்லை.

சஷ்டியப்த பூர்த்தி விழாவின்போது பத்து நாட்களாக அங்கே தங்கிநின்று அவர்கட்கு என்னால் ஆகவேண்டிய சரீர உதவிகளைச் செய்தேன். அவ்வேளையில் நான் அவர்கட்கு அணிந்த இரு ரோஜா மாலைகளைப்பற்றி எல்லோரும் பாராட்டினார்கள். ஐயா அவர்களும் மாலைகளின் பாரம் தாங்காமல் கழற்றி வைத்தாலும் ஒவ்வொருவர் வரும் போதும் அதனை எடுத்து அணிந்து '' இது நீர்வேலிக் குருக்கள் போட்ட மாலை '' என்று எல்லோருக்கும் சொல்லிச் சொல்லி எனக்கு மிகுந்த பாராட்டைச் செய்தார்கள். அப்

பொழுது எடுத்த படம்தான் இப்போதும் 'காந்தமலை' வீட்டு ஹாலில் காட்சியளிக்கின்றது. வருபவர்கள் எல்லோருக்கும் தனித்தனியே ''இலங்கையில் நீர்வேலிக் கிராமம், அங்கே அழகான முருகன் ஆலயம் உண்டு, இவர்தான் அங்கே எல்லாம், விரலை அசைத்தால் ஊரே ஆடும்'' என்று எல்லோருக்கும் கூறி என்னைப் பெருமைப்படுத்துவார்கள். எல்லோருக்கும் என்னைத் தன்னுடைய உடன் பிறவாச் சகோதரன் என்றே அறிமுகப் படுத்துவார்கள்.

அங்கே தங்கி நிற்கும்பொழுது காலையில் அடியேன் செய்யும் சிவபூசை முடிவை எதிர் பார்த்து நின்று இரு கைகளாலும் (துண்டை கீழே பிடித்தபடி) தீர்த்தப் பிரசாதம் வாங்கிச் சாப்பிடுவார்கள். மற்றவர்களையும் வாங்கிச் சாப்பிடச் சொல்வார்கள். அம்மா அவர்களும் என் பூசைக்கு வேண்டிய ஆயத்தங்களை முன்கூட்டியே செய்துவிடுவார்கள்.

நான் அங்கே செல்லும் வீட்டு விழாக்களில் எல்லாம் எனக்கே முதல் உபசாரம் செய்வார்கள். (உதாரணம்: சஷ்டியப்த பூர்த்தி, அருமை மகள் உமாவின் விவாஹம், இரண்டாவது மகன் குமார் திருமணம், இப்படியான விசேட வைபவங்கள்) 1966-ம் ஆண்டு ஐயா அவர்களின் இல்லத்தில் தமிழ்ப் பேரறிஞர்கள் கூடிய வைபவத்தில் அடியேனுக்கு ஒரு பொன்னாடை போர்த்தி ''கந்தவேள் அருள் ஒளி மணி'' என்ற பட்டமும் அளித்துக் கௌரவித்தார்கள்.

இவ்விதமாக என்மேல் மிகுந்த அன்பு பாராட்டி உபசரித்த ஐயாவின் இறுதிக் காலத்திலாவது, கிரியைகளிலாவது பங்குகொள்ள முடியவில்லையே என்று மனம் மிகவும் வருந்திக் கொண்டே இருக்கின்றேன்.

உயர்திரு. கி. வா. ஜ. ஐயாவின்
உடன் பிறவாச் சகோதரன்
**முருகனடித் தொண்டன்.**

---

## கொம்பு முளைத்திருக்கிறது

தம்முடைய பெயரைப் பலர் பலவேறு வகையில் எழுதி வருவதைக்கண்டு இவர் வருந்துவார். ஜ க ந் நா த ன் என்று எழுதுவதுதான் முறை. ஒருவர் நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்தார். பேசும் பொருளையும் இவர் பெயரையும் எழுதிக் காட்டி, ''இப்படிப் போடலாம் அல்லவா?'' என்று கேட்டார். ''எனக்குக் கொம்பு முளைத்திருக்கிறதே!'' என்றார் இவர். அன்பர் ஜெகந்நாதன் என்று இவர் பெயரை எழுதியிருந்தார்.

மூட்டினர். தமிழர்க்குத் தமிழ்ப் பாடல்களை இசைக்கத் தெரியாது என்ற வசை இவர்களால் நீங்கிற்று.

ஈழத்தில் இன்று கர்நாடக சங்கீதம் வளர்பிறை போல வளர்ந்து வருகின்றது. எனினும் மெல்லிசை, பொப்பிசை போன்றவற்றால் இதன் வளர்ச்சி ஓரளவு பாதிக்கப்பட்டு வருவதும் கண்கூடு. இந்நிலை மாற வேண்டும். கர்நாடக இசை வளரப் பின்வரும் விதிகளை நாம் செய்து அவற்றை எந்நாளும் காத்துவரல் வேண்டும்.

அ. தமிழ் மக்கள் தம் பிள்ளைகளுக்குக் கர்நாடக இசைக் கல்வியைக் கட்டாயமாகக் கற்பிக்க உறுதிபூணல் வேண்டும்.

ஆ. இசைவல்லார் 'நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற குறிக்கோளோடு இசைப் பயிற்சியை மாபெரும் தொண்டாகப் பரப்பி வரல் வேண்டும்.

இ. இசைக் கலைஞன் நாள்தோறும் ஓரிரு மணித்தியாலங்களாவது தனது சாதகத்தின் மூலம் தன் தரத்தினைக் கூட்டுதல் வேண்டும்.

ஈ. கச்சேரிகளின்போது இசைக் கலைஞர்கள் அறுபது வீதம் தமிழ்ச் சாகித்தியங்களையும், இருபது வீதம் பண்ணிசைப் பாடல்களையும் பாடி வேண்டுமாயின் எஞ்சியுள்ள இருபதுவீதம் பிறமொழிச் சாகித்தியங்களை இசைக்கலாம்.

உ. கச்சேரிகளின்போது நாட்டிய அரங்கேற்றத்திற்போல, இசைப்போர் தாம் பாடும் சாகித்தியத்தின் இராகம், தாளம், கர்த்தா ஆகியன பற்றிக் கூறிக்கூறிப் பொதுமக்களுக்குக் கர்நாடக இசையின் அறிவை வளர்த்தல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் சிந்தித்துச் செயற்பட்டால் கர்நாடக இசை வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்கலையாய் வளரும் என்பதற்கு ஐயம் இல்லை.

அன்பளிப்பு:

கணேசன் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம்.

இன்றே விஜயஞ் செய்யுங்கள் !

# நியூ ராஜா கிறீம் ஹவுஸ்

## அன் கபே

64, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(ஆர். ஜி. பில்டிங் - லிடோ தியேட்டருக்கு அண்மையில்)

தரமான - சுவையான

★ ஐஸ் கிறீம் வகைகள் ★ கேக் வகைகள்

★ சிற்றுண்டி வகைகள் ★ மட்டன்றேல்

★ குளிர்பானங்கள் ★ கட்லட்

★ ராஜா பீடா

சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற

'ராஜா டிக்காஸ் கோப்பியை'

சூடாகவும், குளிராகவும் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்

விழாக்கள், களியாட்டங்கள் அனைத்துக்கும் தேவையானவற்றை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இசைவிழா இனிது நடைபெற எமது வாழ்த்துக்கள்!

# முருகன்
# ★ எலெக்ரிக்கல் ஸ்ரோர்ஸ் ★

மின்சார ஒப்பந்தகாரரும்,
விற்பனையாளரும்.

6/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தந்தி: "கறண்"    போன்: 7110

# இசைத்தமிழ்

வித்துவான், சி. ஆறுமுகம்

முத்தமிழில் நடுநாயகமாக விளங்குவது இசைத் தமிழ். இயற்றமிழ்ப் பாடல்கள் இசையினால் இசைவன. நாடகமும் இசையின் இசைவினால் ஏற்றம் பெறுகிறது. நடுநின்று இருவகைத் தமிழையும் இணைக்கும் இசைத் தமிழுக்கு இணையானபொருள் ஒன்றும் இவ்வுலகில் இல்லை. இசை என்னுஞ் சொல்லுக்கு இனிமை என்றொரு பொருளும் உண்டு. இனிமை பயக்கும் தமிழ், இசைத்தமிழ் எனப்பட்டது. தமிழுக்கும் இனிமை என்பதே பொருள். எனவே தமிழின் உண்மையியல்பினை விளக்குவது இசைத்தமிழ் ஆகும். 'இறைவன் இசைக்குருகும் இயல்பினன்' என்பது இந்திய மக்களின் அநுபவ சித்தாந்தம். உள்ளத்தை இறைவனோடு இசைவிப்பதும் இசையாகும். உயிர்க்குலங்கள் யாவும் இசையினை இரசிக்கும் இயல்புடையவை. இசையினால் இவ்வுலகத்தினையே ஒன்றாய் இணைக்கலாம்!

பண்டைத் தமிழர் இசையின் நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்தறிந்துள்ளனர். மிடற்றிலிருந்து எழும் இசை மிடற்றிசை எனப்படும். நரம்புக் கருவிகளிலிருந்து எழுப்பிய இசை நரம்பிசையாகும். யாழும், வீணையும் நரம்பிசைக் கருவிகள். குழலிருந்து எழுமிசை குழலிசை. புல்லாங்குழலும், நாதசுரமும் பிறவும் குழலிசைக் கருவிகள். மத்தளமும், ஒருகை முழவும் பிறவும் முழவிசைக் கருவிகள். இசையின் தோற்றம் எழுநிலைகள் கொண்டது. பண்டைத் தமிழிசை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என எழு வகைப்பட்டது. ஏழிசைகளையும் இடம் மாற்றி இசைப்பதனால் பல்வேறு பண்கள் பிறக்கும். இசையின் வகைகள் இந்நாளில் இராகம் என்று அழைக்கப்படும். பண்டு இவை பண்கள் என்று அழைக்கப்பட்டன. தமிழ்ப் பண்களுக்கு இணையான இராகங்களை இசையறிஞர் சிலர் அறுதியிட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள். முதற் சங்க காலத்திலேயே சிறந்த இசைநூல்கள் தமிழில் எழுந்தனவாம். அவையெல்லாம் காலவெள்ளத்தில் அழிந்துபோயின. பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் என்பன அழிந்தொழிந்த நூல்களுட் சில. அவற்றின் பெயரையாவது நினைவில் வைப்பது நமது பெருங் கடமை. கடைச் சங்ககால நூல்களுள் இசைக்குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. இசைப் பாணர்களும், பாடினியரும் தமிழகமெங்கணும் இசைவிருந்தளித்தனர். பரிபாடல் என்னும் சங்கநூலிலுள்ள பாடல்கள் பண்டு இசையுடன் பாடப்பட்டன. அவற்றுட் சில பண்டைநாளில் கோவில் வழிபாட்டுக்குரிய பாடல்களாக விளங்கின. ஆயினும் பௌத்தரும், சமணரும் தமிழ் நாட்டிற் புகுந்ததும் இசைத் தமிழ் வீழ்ச்சியுற்றது. 'இசையும், நாடகமும் காமத்தை விளைவிப்பன' என்ற கொள்கையுடைய இவ்விரு மதத்தினரும் இசைத்தமிழ் நூல்களைச் சிதைத்துவிட்டனர். அனலுக்கும், புனலுக்கும் அவை இரையாகிவிட்டன. எனினும் நெஞ்சையள்ளும் 'சிலப்பதிகாரம்' என்னும் செஞ்சொற் காவியம் எழுந்து பண்டைத் தமிழன் கண்ட இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழினையும் பேணிய காலமும் இதுவே. இன்றுள்ள செந்தமிழ் நூல்களுள் இசை, நடனம் என்னுமிரண்டின் இயல்புகளையும் ஓரளவேனும் விளக்கிநிற்கும் நூல் சிலப்பதிகாரமே. இதனை நாடகக் காப்பியம் என்று நாடு போற்றி வருகின்றது.

தமிழ்நாட்டிலே பக்தி வெள்ளம் பரவியெழுந்த பல்லவர் காலத்திலே தமிழிசை மீண்டும் தலைதூக்கியது. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் உள்ளம் உருகிப்பாடிய திருமுறைப்பாடல்களும், திவ்விய பிரபந்தச் செய்யுள்களும் இசைத் தமிழ்க்கருவூலங்கள். இறைவனை 'ஏழிசையாய் இசைப்பயனாய்'க் கண்டவர்கள் அடியார்கள். பலரும் கூடிப் பாடிப்பாடித் திருக்கோவில்களை வலம்வந்து தெருவெல்லாம் இசைமுழக்கம் புரிந்தவர்கள் பக்திச் செல்வர்கள். 'தமிழோடிசைபாடல் மறந்தறியேன்,' 'ஏழிசையாய் இசைப்பயனாய்,' 'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக,' 'இன்குரலிசை கெழும் யாழ்முரல்,' 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்' என்றெல்லாம் சைவநாயன்மார் உருகிக் கூறும் உரைகள் இசைத் தமிழின் அன்றைய உயர்வினை இசைக்கின்றன. வைணவ ஆழ்வார்களும் 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய' இசைத் தமிழ்ப் பாடல்கள் எண்ணிலடங்காதவை. பத்திப் பாடல்களுள் தேவாரத் திருமுறைகள் பண்ணொடு ஓதும் மரபு கோவில்களில் பண்டு ஒழுங்குற நிகழ்ந்தது. தமிழ் நாட்டையாண்ட மன்னர்கள் கோவில்களுக்கு விளைநிலங்களை மானியமாக விட்டமை கல்வெட்டுக்களின்மூலம் அறியக்கிடக்கின்றது. அக் கல்வெட்டுக்களில் தேவாரம் பாடுபவரின் தகுதிகளும், அவருக்கு அளிக்கவேண்டிய சன்மானங்களும் குறிக்கப்பட்டுள்ளன. சோழமன்னர் ஆட்சி மீண்டும் தலைதூக்கிய காலத்தில் திருமுறைகளும் தலைதூக்கின. நம்பியாண்டார்நம்பி அவற்றைத் தொகுத்து உதவினார். மறைந்த தமிழ்ப் பண்களும் அவற்றைப் பாடும் முறைகளும் புத்துயிர் பெற்றன. இசைத் தமிழும் தமிழகமெங்கணும் இசைத்தது.

தென்னிந்திய இசையைக் கருநாடக இசை என்றும் அழைப்பர். கருநாடகம் என்ற தொடருக்குப் 'பழைமை' என்னும் பொருளும் உண்டு. வடஇந்திய இசை இந்துஸ்தானி எனப்படும். வடநாட்டு இசையில் அரேபிய, பாரசீக இசைக்கலப்பு உண்டு. ஆனால் தென்னாட்டிசையிலோ அத்தகைய கலப்பு இல்லை. இதனால் தமிழிசை தனிப் பண்புடன் விளங்கிற்று. வடநாட்டிசைக்கும், தென்னாட்டிசைக்குமுள்ள வேறுபாட்டினைக் காட்டும் பொருட்டே கிறித்துவின் பின் பதின்மூன்றும் நூற்றாண்டளவில் 'கருநாடகம்' என்ற பெயரை இசையிலக்கண ஆசிரியர்கள் இட்டு வழங்கினர்.

பண்டு பாணர் பரப்பிய தமிழிசையானது இடைக் காலத்தில் பக்திமான்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு வளர்ந்தது. பிற்காலத்தில் அது சிறிது பொலிவிழந்தது. ஆயினும் சந்தக் கவி அருணகிரிநாதன் பாடல்கள் இசையின்பத்தினை நாடெங்கும் நன்கு ஊட்டின. மீண்டும் பத்திவெள்ளம் பெருக்கெடுத்தது. பிற்காலத்தில் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்களும் இசைத்தமிழை ஓரளவு பேணிவந்தனர். தமிழ்நாட்டு மடங்களும் தமிழிசையை நன்கு வளர்க்க முனைந்தன. கோவில்களும் பண்ணமுதவிசையினைப் பாதுகாக்க முற்பட்டன. தமிழகத்திலும், கடல்கடந்த நாடுகளிலும் இசைத் தமிழ்ச் சங்கங்கள் எழுந்தன. செந்தமிழ்க் காவலர், செட்டிநாட்டு வள்ளல் இராஜா சேர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சென்னையில் தமிழிசைச் சங்கம் நிறுவியருளினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழிசைக் கல்லூரி நிறுவியது. இசைத் தமிழ் உணர்ச்சி எங்கணும் எழுந்தது. விபுலானந்த அடிகளார் பண்டைய இசைக்குப் புத்துயிர் ஊட்டும்வண்ணம் 'யாழ்நூல்' யாத்துதவினார். அறிஞர் பலர் இசையாராய்ச்சியில் ஈடுபட்டுழைக்கின்றனர். ஈழத்திலும், இசைக் கழகங்கள் பல தோன்றிப் பெருந்தொண்டு புரிந்துவருகின்றன. முத்தமிழுள் நடுநாயகமாக நிற்கும் அற்புத இசைத்தமிழார்வம் மிகுந்துள்ளது. இசைத்தமிழின் குரல் ஐக்கிய நாடுகள் சபையிலும் இடைக்கிடை ஒலிக்கின்றது. தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவி நிற்கின்றது. இசைத்தமிழ் வளர்ச்சி ஈடும் இணையுமின்றித் தமிழிசைபோல் எழுந்து நிற்கின்றது. வெல்க இசைத்தமிழ்!

★

# இசைப் பூங்காவில் இளங் கலைஞர்களின் எழுச்சி...

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்,
இளங்கலைஞர் மன்றம்

உலகில் இன்று எங்கு பார்த்தாலும் இளைஞர்களின் எழுச்சியைக் காணக்கூடிய தாக இருக்கின்றது. இந்த நிலையில் இளம் கலைஞர்களின் எழுச்சியையும் இசையுலகில் வெளிக்கொணர்வதற்கு எம் மன்றம் ஆற்றிவரும் சேவையை, வழமைபோல் இவ் வாண்டும், தனது 6-வது இசைவிழாவை 31–7–77 தொடக்கம் 9–8–77 வரை 10 தினங்கள் இம் மன்றம் நடாத்துகிறது. 1971ம் ஆண்டு நவம்பர் 2ம் திகதி ஆரம்பிக்கப் பட்ட இம்மன்றம் தனது 5½ வயதை எட்டியநிலையில் செய்த, செய்கின்ற, செய்யப் போகின்ற சேவையினை கலையுலகத் தொடர்புடைய மக்கள் எவரும் அறியாதிருக்க முடியாது. இம்மன்றத்தின் தலைவர் என்றமுறையில் எமது 5ம் ஆண்டு மலரிலே இளங் கலைஞர்களுக்கென ஓர் நிரந்தர கலாமண்டபம் அமைத்துத் தரும்படி கேட்டிருந் தேன். மேற்படி மண்டபம் அமைப்பதற்கு ஒரு லட்சத்திற்கும் மேலான பெறுமதி வாய்ந்த 10 பரப்புக் காணியை புத்தூர் மளவராயர் வழிவந்த திரு. சிற்றம்பலம் அவர்கள் எங்களுக்கு எழுதித் தந்துள்ளார்கள். (உறுதி இல. 13804) காணி எம்மிடம் இருந்தும் இதுவரை கலாமண்டபத்துக்கான ஏற்பாட்டை நாம் செய்ய முடியாதிருக் கின்றோம். இளங் கலைஞர்கள் முன்னேறுவதில் ஆர்வமுள்ள பெற்றோர்களே! பெரி யோர்களே! இதைப்பற்றி மீண்டும் சிந்தித்துச் செயலாற்றும்படி மிகவும் பணிவன்பு டன் கேட்டுக்கொள்கின்றேன்.

இளங் கலைஞர்களே! எவ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் இம் மன்றத்தை வழி நடத்திச் செல்கின்றோம். இந்த நிலையில் உங்களது பங்கை நீங்கள் சரிவரச் செய்கின் றீர்களா? .... சற்றுச் சிந்தியுங்கள். இது உங்களை ஊக்குவிக்க ஏற்பட்ட மன்றமே தவிர, தனிப்பட்ட எவரது சொந்த நலனுக்காகவும் அல்ல என்பதுடன் இன, மத, மொழி பேதமற்ற, வசதி படைத்த, வசதியற்ற எல்லோர்க்கும் இது ஓர் பொது மன் றமாக இயங்கிவருவதை நீங்கள் அறிவீர்கள். எவ்வளவோ பொறுப்பு வாய்ந்த பலர் தங்களது பொன்னான நேரத்தை உங்கள் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வருகிறார்கள். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது, இக்காலகட்டத்தில் இளைஞர்களாகிய உங் களது எழுச்சி, அகில இலங்கையும் வியக்கும்படியாக இம்மன்ற ஆரம்ப காலத்தில் உள்ள உத்வேகத்துடன் செயல்படும்படி வேண்டிக்கொள்கின்றேன். இம் மன்றம் ஆரம்பிக்கப்பட்டு 6ஆம் ஆண்டு இசைவிழாவுடன் இதுவரை 45 தினங்களுக்கு ஒரு முறையாக 20 இசை நிகழ்ச்சிகளும், 7 நாள் இசைவிழா இரண்டும், 10 நாள் இசை விழா நான்கும், 3ம் தியாகராஜர் உற்சவம் 5ம், இசையரங்கேற்றம் ஒன்றுமாக 9–8–77 திகதியுடன் நடாத்தி முடித்துள்ளது என்பதைத் தெரியத்தருகின்றோம்.

இதுவரை இம்மன்றம் 825 இளங் கலைஞர்களை மேடையேற்றியதுடன் நின்று விடாமல் அகில இலங்கை ரீதியாக நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்க ளுக்கு 47 தங்கப் பதக்கங்களும், 46 வெற்றிக் கேடயங்களும், 49 வெள்ளிக் கிண்ணங் களும் பரிசாக வழங்கியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் இவ்வளவு விலைமதிப்பு வாய்ந்த பரிசில்களை வழங்குவ தற்கு மூலகாரணமாக இருந்த வள்ளல்கள், வணிகப்பெருங்குடி மக்கள் ஆகியோரின் பெருந்தொண்டுக்கு இளங் கலைஞர் மன்றம் என்றென்றும் நன்றியைத் தெரிவித்து, மீண்டும் அவர்களது சேவை இளங் கலைஞர்களுக்குத் தேவை என்பதைப் பணிவன் புடன் தெரிவிப்பதோடு, இம்முறை இசைவிழா சிறப்புற நடந்திடப் பேராதரவும், ஒத்துழைப்பும் தந்திடும் வண்ணம் கலைஞர்கள், கலாரசிகர்கள், பொதுமக்கள், பத் திரிகை ஆசிரியர் மற்றும் அனைவரையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

வாழ்க இசை! வளர்க இளங் கலைஞர் மன்றம் !!

*With the best Compliments of:*

# CEYLON POLYTHENE INDUSTRIES

**550/10, P. B. ALWIS PERERA MAWATHA,**

**KATUBEDDA, — — MORATUWA.**

Manufactures: POLETHENE FILM AND BAGS
PRINTED AND PLAIN.

---

786

Telegrams:
"MEERA" Jaffna.

Phone:
**7134**

# S. M. MEERAN SAHIB

**General Merchant & Transport Agent.**

DEALER IN:

**HIDES, BEACH DE-MER. SHARKFINS ETC.**

Branch Office:
155, SEA STREET,
COLOMBO.

117, Manipay Road,
JAFFNA.

பிடவைத் தினிசுகள் எதுவானாலும்

# ★ மணியம்ஸ் ★

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



வனிதையர் விரும்பும் வகைவகையான
பிடவைத் தினிசுகள்
கூறைச்சேலை வகைகள்
ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங், சூட்டிங் வகைகள்

குழந்தைகளுக்கான
றெடிமேட் உடைகள்
மற்றும்
அழகுசாதனப் பொருட்கள் யாவும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

☎ 7545

# MANIAMS

**16, Modern Market, Jaffna.**

# சங்கீர்த்தனத்தின் முக்கியத்துவம்

S. கனகரட்ணம் (தலைவர், யாழ். திவ்ய ஜீவன சங்கம்)

பிரம்மா, குதிரைகள், பசுக்கள், நாய்கள், யானைகள் முதலியவற்றைப் போன்ற பல்வேறு வகையான ஜீவராசிகளைச் சிருஷ்டிசெய்தார். ஆனால் அவர் பூரணமாகத் திருப்தியடையவில்லை. பிறகு அவர் மனிதனைச் சிருஷ்டித்தார். இது அவருக்குப் பரிபூரண திருப்தியை அளித்தது. ஏனென்றால் மனிதன் ஒருவனால்தான் சப்த ஸ்வரங்களையும் (ஸ, ரி, க, ம, ப, த, நி) உண்டுபண்ண முடிகிறது. அவனால் கீர்த்தனை செய்ய முடிவதோடு சங்கீர்த்தனத்தின் மூலம் இறைவனையும் உணர முடிகின்றது. மிருகங்கள் ஒரேவிதமான சப்தம் அல்லது ஸ்வரத்தையே உண்டுபண்ண முடிகிறது.

மனம் ஐந்து விஷயங்களையும் அனுபவிக்கின்றது. நம்மைப் பரமாத்மனிடமிருந்து பிரித்துவைக்கும் தடை மனம்தான். மனமாகிய உருவை அமைக்கப்போகும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கின்ற இந்த ஐந்து பூதங்களும் ஆத்மனாகிய இரத்தினத்தைக் கொள்ளைகொண்ட ஐந்து கொள்ளையர்களாம். இதற்குத் தலைவனாக இருப்பது ஆகாசம்தான். உன்னால் ஆகாசத்தை அடக்க முடிந்தால், உன்னால் தலைவனை அடிபணியச் செய்ய முடிந்தால் மற்ற நான்கு பூதங்களும் உன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும். உன்னால் பஞ்சபூதங்களையும் கட்டுப்படுத்த முடிந்தால் மனத்தை உன்னால் வெகுசுலபமாக அடக்கிவிடமுடியும். ஆகாசத்தினுடைய தொழில் சப்தம். இறைவனுடைய நாமத்தை உன்னால் இனிமையான குரலில் ராக தாளத்துடன் பாடமுடிந்தால் உன்னால் ஆகாச தத்துவத்தைக் கட்டுப்படுத்த முடியும். அதன்மூலம் இதர பூதங்களையும் மனத்தையும் கட்டுப்படுத்திவிடலாம். ஆகவேதான் பகவான் நாரதரிடம் ''நான் விண்ணுலகத்திலோ அல்லது யோகிகளுடைய உள்ளத்திலோ வசிக்கவில்லை. ஆனால் என்னுடைய பக்தர்கள் என்னுடைய நாமத்தைப் பாடுகிறார்களோ அங்கு இருக்கிறேன்'' என்று கூறுகின்றார்.

சங்கீர்த்தனம் உள்ளம், ஆன்மா இரண்டிற்கும் உணவாகும். சங்கீர்த்தனம் ஒரு தெய்வீக மருந்தாகும். தளர்ந்துவிட்ட நரம்புகளுக்கு ஒரு சக்தி வாய்ந்த நிவாரணியாகும். சங்கீர்த்தனம் ஒரு தேவாமிர்தமாகும். இந்த தேவாமிர்தத்தைத் தினந்தோறும் பிரம்ம முகூர்த்தத்திலும், இரவிலும் சங்கீர்த்தனம் செய்வதன்மூலம் குடியுங்கள்.

சங்கீர்த்தனத்திற்காக நீ உன்னுடைய வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிக்க வேண்டும். ஏராளமான குழந்தைகளைப் பிறப்பிக்காதே. வாழக்கையில் வெற்றி பெறுவதற்கு அதுதான் திறவுகோல். மாயையினுடைய சக்தி விசித்திரமானது. மோகத்தினுடைய சக்தி வேடிக்கையானது. ஆனால் சங்கீர்த்தன்க்காரர்களை மாயையும், மோகமும் நெருங்கவேமுடியாது.

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம் வருடந்தோறும் யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடாத்தும் இசைவிழாக்கள் மூலம் சங்கீர்த்னத்துக்குப் புத்துயிர் கொடுத்து வருகிறார்கள். இச்சிறந்த சேவை மூலம் மக்களிடம் தெய்வீகத் தன்மையையும், பக்தியையும் வளரச்செய்ய உதவுகின்றீர்கள். இந்த வருடம் உங்கள் இசைவிழா யாழ். திவ்ய ஜீவன சங்கம் நடாத்தும் குருசாணி விழா. சுவாமி சிவானந்த மகரிஷி மகாசமாதியடைந்த பதினைலாவது புண்ணிய திதி ஆராதனை வைபவம் என்பவையோடு சேர்ந்து நடப்பது மிகவும் பொருத்தமானதாகும். சிவானந்த மகரிஷி அவர்கள் சங்கீர்த்தனத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்த பெரியார். உங்கள் சேவை மேலும் மேலும் வளர குருதேவர் அருள்புரிவாராக.

★



இலங்கையில் மாத்திரமன்றி கடல்கடந்த நாடுகளிலும்
கலைத்தொடர்பை ஏற்படுத்தி,
ஈழத்திரு நாட்டிற்கு பெருமைக்குரிய கலைஞர்கள் பலரைத் தந்து
அண்மையில் மறைந்த

**கோண்டாவில், நாதஸ்வரக் கலைஞர்**

# திரு. ஆறுமுகம்பிள்ளை அவர்களுக்கு

**இளங்கலைஞர் மன்றத்தினர் தமது ஆழ்ந்த**
**அனுதாபத்தைத் தெரிவிக்கின்றார்கள்.**

# நாதஸ்வர வித்துவான் ஆறுமுகம்பிள்ளை

— மு. வாமதேவன் —
செயற்குழு உறுப்பினர், இளங்கலைஞர் மன்றம்

இன்றைய ஈழத்தின் இசைப் பரம்பரையில் தனக்கெனத் தனியிடம் வகுத்து, தனக்குப் பின்னும் இசையை வளர்க்கக்கூடிய வகையில் இசைக் கலைஞர்கள் பலரை உருவாக்கிய இசைமேதை, ஆறுமுகம்பிள்ளையின் இழப்பு இசைக் கலைஞர்களுக்குப் பேரிழப்பாகிவிட்டது.

எண்திசையிலும் இசைக்கலையை வளர்க்கத்தக்க இளங் கலைஞர்களை உருவாக்கி வளர்த்துவிட்டு எண்பத்தாறுவது வயதில் இசையுலகைவிட்டு விண்ணுலகெய்தியவர் நாதஸ்வர வித்துவான் ஆறுமுகம்பிள்ளையாகும்.

நாதஸ்வர வித்துவான் ஆறுமுகம்பிள்ளை மூளாய் பிள்ளையார் கோவில் அண்மித்த இடத்தில் பிறந்து கோண்டாவிலில் கந்தர்வளவுப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மித்த இடத்தில் அமரத்துவம் அடைந்தார்.

பிறப்பிலும் இறப்பிலும் இறைவன் குடிகொண்டிருக்கும் இடத்தைக்காணும் பாக்கியத்தினைப் பெற்றவர் நாதஸ்வர வித்துவான் ஆறுமுகம்பிள்ளை.

மூளாயில் பிறந்த இவர் சித்தங்கேணியில் பொன்னுச்சாமி மகள் வீரலட்சுமியைத் திருமணஞ் செய்ததனல் ஐந்து ஆண் பிள்ளைகளுக்கும், ஏழு பெண் பிள்ளைகளுக்கும் தந்தையாகும் பேற்றைப் பெற்றார்.

"தந்தை மகர்க்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க அதை நிரூபிக்கும் வகையில் ஆண்களாகப் பிறந்த ஐந்து பிள்ளைகளும், இன்று ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் இன்னிசை பரப்பிப் புகழேணியின் உச்சக்கட்டத்தில் உள்ளார்கள்.

ஒரு மகன் - மூத்தமகன் சண்முகசுந்தரம் பிரபல தவில் வித்துவான். தனது பதினாறுவது வயதில் தமிழகம் சென்ற சண்முகசுந்தரம், கும்பகோணத்தில் வலங்கைமானில் குடியேறியதால் வலங்கைமான் என்னும் இடத்திற்குப் புகழைத் தேடிக்கொடுத்ததுடன் தவில் வாசிப்பதில், வலங்கைமான் சண்முகசுந்தரத்திற்கு நிகர் அவரேதான் என்ற பெருமையை நிலைநாட்டியுள்ளார்.

வலங்கைமான் சண்முகசுந்தரம் தமிழகத்தில் இன்று தவில் வாசிப்பதில் முன்னணியில் திகழ்பவர்களான வடபாதி மங்களம் தட்சணாமூர்த்தி, திருச்சேரை T. G. முத்துக்குமாரசாமி, அருத்துவார மங்களம் பழனிவேலு, வலையப்பிட்டி சுப்பிரமணியம், திருவாழப்புத்தூர் கலியமூர்த்தி ஆகியோர்களுடன் இணைந்து தவில் வாசித்துள்ளார்.

வலங்கைமான் சண்முகசுந்தரத்தின் வித்துவத்தன்மையைப் பாராட்டிக் குன்னக்குடியில் வைத்துத் "தவில்நாதமணி" என்னும் பட்டத்தையும், திருவண்ணமலையில் வைத்துத் "தவில் மேதை" என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களினால் தமிழக அரசின் சார்பில் "கலைமாமணி" என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

கோண்டாவில், வி. ஏ. பாலகிருஷ்ணன்: நாதஸ்வர உலகில் ஈழத்தில் மட்டுமன்றி, தமிழகம், சிங்கப்பூர், மலேஷியா போன்ற தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் புகழ்

பரப்பி நாதஸ்வரத்தில் தனக்கென ஒரு பாணியை அமைத்துச் சுடர்விட்டுப் பிரகாசித்து கோண்டாவிலுக்கே பெருமை தேடித்தந்துள்ளார்.

**வி. ஏ. சந்தானகிருஷ்ணன் :** தபால் தந்தித் திணைக்களத்தில் பணிபுரிந்தபோதும் பிரபல மிருதங்க வித்துவான் என்ற புகழுக்குரியவர். இலங்கை வானொலியில் நிகழ்ச்சிகள் அளித்து வருகிறார்.

**வி. ஏ. முத்துக்கிருஷ்ணன் :** இலங்கை விமானச் சேவையில் பணிபுரியும் இவரும் மிருதங்கம் வாசிப்பதில் வல்லவர்.

**வி. ஏ. இராதாகிருஷ்ணன் :** இவர் நாதஸ்வரம் வாசிப்பதில் ஈடுபட்டுள்ளார்.

இசைமேதை ஆறுமுகம்பிள்ளையின் ஆண் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் வல்லுநர்களாக விளங்கும் அதேநேரத்தில் ஏழு பெண் பிள்ளைகளில் ஒருவராவது இசையில் ஈடுபடாமல் விட்டது ஆச்சரியத்திற்குரியதே.

எனினும் அவரது பெண் பிள்ளைகளின் பிள்ளைகள் - அதாவது பேரப்பிள்ளைகள் ஈழத்தின் நாதஸ்வரப் பரம்பரையில் ஒரு இளைய தலைமுறையை உருவாக்கி வருகிறார்கள். அவர்கள்தான் கோண்டாவில், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள். ஈழத்து நாதஸ்வரப் பரம்பரையின் இளைய தலைமுறையின் இரட்டையர்கள். இவர்களும் தமிழகம், சிங்கப்பூர், மலேஷியா போன்ற தமிழ் ஊறும் நல்லுலகம் எங்கணும் நாதஸ்வர மழை பொழிந்து பாராட்டுக்கள் பெற்றுள்ளார்கள்.

இசையை இறைவனுக்கே அர்ப்பணித்த தவில்மேதை அமரர் தட்ஷணாமூர்த்தி ஆறுமுகம்பிள்ளையின் மருமகன். இணுவையூர் தவில் வித்துவான், என். ஆர். சின்னராசா, நாச்சிமார்கோவிலடி தவில் வித்துவான் கே. கணேஷ் ஆகியோரின் மாமனார் முறைக்குரியவர்.

இத்தகைய கலைச்செல்வங்களை ஈழத்துக்கு மட்டுமல்லாது, தமிழன் எங்கெல்லாம் பரந்து வாழ்கிறானோ அங்கெல்லாம் இசையைப் பரப்பி இசைக்கலையின் தொன்மையைப், பெருமையை நிலைநிறுத்தத் தந்த, பெருமைக்குரிய இசைமேதை ஆறுமுகம் பிள்ளையின் ஆத்மா சாந்தியடைய இலங்கை இளங் கலைஞர் மன்றம் பிரார்த்திப்பதுடன் அவர் விட்டுச்சென்ற கலைச் செல்வங்களுக்கு மன்றத்தின் ஆழ்ந்த அநுதாபங்கள் உரித்தாகட்டும்.




*With the best Compliments of :*

**SOTHI TEXTILES**

SPECIALISTS IN SAREES.

**14, New Model Market, Power House Road, JAFFNA.**

*With the best Compliments of:*

# CAMBRIDGE TUTORIAL COLLEGE

THIRUNELVELY JUNCTION,
JAFFNA.

BRANCH :

No. 44, Stanley Road,
Jaffna.

★ உணவுப் பொருட்கள்

★ கட்டிடப் பொருட்கள்

★ எரிபொருட்கள்

★ பாடசாலைப் புத்தகங்கள் - உபகரணங்கள்

★ நவநாகரிக ஜவுளி வகைகள்

முதலானவை;

சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை

ப. நோ. கூ. சங்கம்

பிரதான வீதி,

பருத்தித்துறை.

# நமது இசை மரபு

கலாநிதி அ. சண்முகதாஸ்
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாண வளாகம்

தமிழர்களாகிய எமது இசைமரபு என்ன? இன்று இந்த வினாவுக்கு நாம் என்ன மறுமொழி கூறலாம்? கருநாடக இசை, மெல்லிசை, பொப்பிசை என்றெல்லாம் இன்று பல இசைகள் உண்டு. மரபு பேணிக்காக்கவேண்டுமென அடிக்கடி கூறிக்கொள்ளுபவர்களிற் பலர் பொப்பிசை கேட்டுத் துள்ளுவதையுங் கண்டிருக்கிறோம். ஆனால் இந்த இசை எமக்கு அண்மைக் காலத்தில்தான் வெளிநாட்டு இறக்குமதியாகக் கிடைத்தது. மெல்லிசை கருநாடக இசையைத் தழுவியே அமைகின்றது. ஆகவே கருநாடக இசையே எமது மரபுவழி இசையென்பது பெறப்படுகின்றது. ஆனால் கருநாடக இசையோ தென்னிந்திய மக்கள் யாவருக்குமே பொதுவானதாகும். வட இந்திய மக்களின் இசை இந்துஸ்தானி எனப்படும். இவ்விரு இசை மரபுகளும் இந்திய நாட்டின் பொது இசைப் பாரம்பரியத்திலிருந்து பிறந்தனவே.

இந்திய இசையின் அடிப்படையான பண்பு இன்னிசைத் தன்மையாகும். இதனை ஆங்கிலத்தில் Melody என்பர். மேனாட்டு இசையினை ஒத்திசை என்பர். ஆங்கிலத்தில் அது harmony எனப்படும். இவ்விரு இசை வகைகளின் வேறுபாட்டை ஓர் அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> ''இந்திய இசை இந்திய ஞானத்தின் ஆன்மாவை அடிப்படையாகக் கொண்டது. இந்திய ஞானம் தனி மனிதனை மையமாகக் கொண்டமைகிறது. ஆகவே அத் தனிமனிதனது விளக்கமாக இந்திய இன்னிசை அமைந்துவிடுகின்றது. மேனாட்டு ஒத்திசையோ கூட்ட உணர்ச்சியின் பிரதிபிம்பமாகும். பலர் கூடி ஒன்றாகும் தத்துவத்தை அது காட்டுகிறது.''

மேனாட்டிலும் ஒத்திசை வளர்ச்சியடைவதற்கு முன்னர் இன்னிசையே வழக்கிலிருந்தது. இசைக் கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரே ஒத்திசை வளர்ச்சியடைந்தது. ஆனால் இந்திய இசையைப் பொறுத்தமட்டில், அது இன்னிசையாகவே தொடர்ந்து அமைந்துவந்துள்ளது. இத்தகைய இந்திய இசையின் ஒருபகுதிதான் கருநாடக இசை. இந்த இசை தென்னாடு முழுவதற்கும் சொந்தமானதாகையால், தமிழ் மக்களுக்கெனத் தனியான இசைமரபு இருந்ததா என்னும் வினா தோன்றுகின்றது.

நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் தட்பவெப்பநிலை வேறுபாடுகளாலும், பழக்க வழக்க வேறுபாடுகளாலும், மொழி, நாகரிக வேறுபாடுகளாலும் ஆடல், பாடல், கலைகளும் வெவ்வேறு வகையாக வளர்ந்துவந்துள்ளன. தமிழ்நாட்டு இசை பற்றிப் பழந்தமிழ் இலக்கணகாரர் தொல்காப்பியர் கூறுமிடத்து பொழுதுடன் தொடர்புறுத்தியே குறிப்பிடுகிறார். பண்டைய தமிழக நிலத்தினைத் தொல்காப்பியர் பின்வருமாறு பாகுபாடு செய்கின்றார்.

| நிலம் | பொழுது | இடம் |
|---|---|---|
| குறிஞ்சி | கூதிர் காலம்<br>முன்பனிக்காலம்<br>நள்ளிரவு | மலையும் மலைசார்ந்த இடமும் |
| முல்லை | கார்காலம், மாலை | காடும் காடுசார்ந்த இடமும் |

| நிலம் | பொழுது | இடம் |
|---|---|---|
| மருதம் | வைகறை, விடியல் | வயலும் வயல்சார்ந்த இடமும் |
| நெய்தல் | சாயுங்காலம் | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | வேனில் பின்பனிக்காலம் நண்பகல் | காடும் மலையும் வளங் கெட்டுத் திரிந்த பகுதி |

இவ்வைந்து நிலங்களுள் ஒவ்வொன்றிற்கும் அந்நிலத் தொழிலோடு தொடர்புடைய இசை, இன்ப இசை ஆகியன பற்றியும் தொல்காப்பியர் கூறியுள்ளார். நெய்தல் நிலத்தில் வாழுகின்ற மக்களின் முக்கிய தொழில் மீன் பிடித்தலாகும். அதற்கு நாவாய் ஓட்டுதல் அவசியமாகும். ஆகவே அந்நிலத்துத் தொழிலிசையுடன் தொடர்புடைய இசைக்கருவியினை நாவாய்ப் பறை என அழைத்தனர். இந்த அடிப்படையில் ஒவ்வொரு நிலத்துக்குமுரிய பண், பறை பற்றிய விபரங்களை தொல்காப்பியர் பின்வருமாறு பாகுபடுத்தியுள்ளார்.

| பண் | பறை | நிலம் |
|---|---|---|
| குறிஞ்சி | வெறியாட்டுப்பறை | குறிஞ்சி |
| சாதாரி | ஏறுகோட்பறை | முல்லை |
| மருதம் | நெல்லரிப்பறை | மருதம் |
| செவ்வழி | நாவாய்ப்பறை | நெய்தல் |
| பாலை | ஆறலைப்பறை | பாலை |

இவ்வாறு தமிழ் இசையும், இசைக் கருவிகளும் ஒவ்வொரு நிலத்துக்கேற்றவகையில், அந்நிலத்தின் இயற்கைச் சூழலுக்கேற்பத் தமிழகத்தில் வளர்ச்சியடைந்து வந்தன. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், பிற்காலக் கல்வெட்டுக்கள், ஆழ்வார்கள்—நாயன்மார்கள் பாடல்கள் ஆகியன பழந்தமிழ் இசை வளர்ச்சியினைக் கோடிட்டுக் காட்டுவனவாயுள்ளன.

இவ்வாறு தமிழ் மொழியோடு தொடர்புடையதாக வளர்ச்சிபெற்று வந்த தமிழிசை விஜயநகர நாயக்க மன்னர்கள் காலத்திலே தெலுங்குப் பாடல், வடமொழிப் பாடல் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகொண்டது. இத் தொடர்பின் விளைவே தமிழகத்தில் கருநாடக சங்கீதத்தின் தோற்றமாகும். இச் சங்கீதம் தமிழகத்து இசைக் கலைஞர்களிடையே தெலுங்கு மோகத்தினை ஏற்படுத்திற்று. கச்சேரிகளிலெல்லாம் தெலுங்குப் பாடல்களே பாடப்பட்டன. இது மக்களுக்கு இருந்துவந்த இசையார்வம் மங்குவதற்குக் காரணமாயிற்று. இது பற்றி பாரதியார் கடிந்து கூறுவதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமென எண்ணுகிறேன்.

> ''வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம்பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்துகொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பழம் பாட்டுக்களை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்.''

> ''ரஸஞானம் இல்லாதபடி பல்லவிகளும், கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை, அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான்களிலே பலர் ஸங்கீதத்துக்கு நவ

ரஸங்களே உயிர் என்ற செய்தியை அறியாதவர்கள். முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக ஸங்கதிகளுடன் பாடுவோரே முதல்தர வித்வான்கள். இந்தக்கீர்த்தனங்கள் எல்லாம் ஸம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே முக்காலே மும்மாகாணி வித்வான்களுக்கு அந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும், பதங்களையும் கொலை செய்தும், விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவர்களுக்கு ரஸம் தெரிய நியாயமில்லை.''

இசைக்கலைக்கு ஒலியுஞ் சொற்களும் அவசியமானவை. அச் சொற்கள் நமக்குத் தெரிந்த நமது தாய்மொழியிலேயே அமைந்தால், அவை மக்கள் உள்ளத்தை நன்கு தொட்டுவிடும். திருநாவுக்கரசரின் தாய்மொழி தமிழாகையால், அவர் ''தமிழோடிசைபாடல் மறந்தறியேன்'' என்று பாடினார். தியாகராஜ சுவாமிகளின் தாய்மொழி தெலுங்கு. அதனால் அவர் தெலுங்கு மொழியிலே கீர்த்தனங்களைப் பாடினார். ''தம் தம் தாய்மொழியே இசைப்பாடல்களுக்கு ஏற்றது என்று தெளியாமல், தெலுங்கு மொழி ஒன்றே இசைக்கு உரியது என மயங்கினர்'' என டாக்டர் மு. வரதராசன் குறிப்பிடுகிறார். இதன் காரணமாகவே தமிழ் நாட்டில் தனித்தமிழ் இசை இயக்கம் தோன்றியது. சில கலைஞர்கள் தமிழ்க் கீர்த்தனைகளையே கச்சேரிகளிலே பாடுவது என வரித்துக்கொண்டனர்.

இன்று பொப்பிசை அலை தம்மை மூடி அழித்துவிடுமோவெனத் தமிழிசை அறிஞர்கள் மயங்குகின்றனர். அவ்வாறான மயக்கம் வேண்டியதில்லை. தமக்குத் தெரிந்த கலையைப் பொது மக்களிடங் கொண்டுசேர்க்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபடவேண்டும். பொதுமக்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய மொழியிலே இசையினை அதன் ஸங்கதிகள் குறையாமல் வழங்கவேண்டும். மக்கள் பலர் அதனைக் கேட்கும் வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். ''சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்'' என்பது போல சங்கீதம் செவிப்பழக்கமாகும். அடிக்கடி கேட்டுப் பழகினால் மக்களுடைய ரசனை நிலையும், இசையறிவும் உயர்ச்சியடையும். அந்த நிலையை உண்டாக்க இசைக் கலைஞர்கள் முயற்சிசெய்தேயாகவேண்டும்.

With the best Compliments of:



# CEYMA SILK INDUSTRIES LTD.

THIRUNELVELY,

JAFFNA.

Phone: 7170

Grams: 'Ceyma Silk'

இலங்கை

# இளங்கலைஞர் மன்ற வரவு செலவுக் கணக்கு.

காலம்: **1—5—76** தொடக்கம் **30—4—77** வரை.

## வரவு விபரம்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| மக்கள் வங்கி இருப்பு 1-5-76 | 13 | 52 |
| ரொக்க இருப்பு 1-5-76 | 167 | 36 |
| சாதாரண அங்கத்துவ சந்தா | 360 | 00 |
| செயற்குழு அங்கத்துவ சந்தா | 325 | 00 |
| இசைவிழா இசைப்போட்டி வசூல் | 4550 | 00 |
| மலர் விளம்பர விற்பனை | 1975 | 00 |
| தியாகராஜ உற்சவ வசூல் | 1860 | 00 |
| | 9250 | 88 |

## செலவு விபரம்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| மன்ற பொது செலவு | 262 | 75 |
| இசைவிழா | 3402 | 00 |
| இசைப்போட்டி பரிசில் | 2250 | 00 |
| மலர் பிரசுரம் | 1800 | 00 |
| தியாகராஜ உற்சவம் | 1350 | 00 |
| மக்கள் வங்கி இருப்பு 30-4-77 | 13 | 52 |
| ரொக்க இருப்பு 30-4-77 | 172 | 61 |
| | 9250 | 88 |

மேற்படி கணக்குகள் யாவும் உண்மையானதென உறுதிப்படுத்துகின்றோம்:

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்.

சு. பாலசண்முகநாதன்
பொருளாளர்.

# நன்றி நவில்கின்றேம்...

"அன்னையின் அருளின் துணையால் அன்புடன் கலைஞர் சார்பில்
நன்றியே கூறிப் புகழ்வோம் நாமிரு கலைஞர் இன்று"

✲ மன்றத்தின் சகல விழாக்களையும் சிறப்புற நடாத்திட மண்டபம் தந்து பெருமைப்படுத்தும் யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தினர்,

✲ ஆசிகள் வழங்கியும், தலைமைதாங்கியும் பேராதரவு நல்கிடும் பெருமக்கள்,

✲ விழாமலர் சிறந்திட விளம்பரம் தந்தும், பணஉதவி அளித்தும் ஆதரவு தந்திடும் வணிகப் பெருமக்கள்,

✲ விழாவில் கலந்து சிறப்பளிக்கும் ஈழம் வாழ் கலைஞர்கள்,

✲ இவ்வாண்டிற்கான இசைவிழாவையொட்டிய அகில இலங்கை இசைப்போட்டிகளின் நடுவர்களாகப் பணிபுரிந்த திரு. K. கணேசபிள்ளை அவர்கள், திருமதி. நாகேஸ்வரி பிரம்மானந்தா அவர்கள், செல்வி. சாந்தநாயகி சுப்பிரமணியம் அவர்கள்,

✲ இசைப் போட்டியில் பரிசு பெற்ற கலைஞர்களுக்கு பரிசில்களைத் தந்துதவிய பெருமக்கள், ஆதரவாளர்கள்,

✲ விழாவையொட்டிய சிறப்புச் செய்திகள் வெளியிட்ட பத்திரிகையாளர்கள்,

✲ விழா மலர் சிறந்திட கட்டுரைகள், வாழ்த்துரைகள் நல்கியவர்கள்,

✲ குறுகிய காலத்தில் மிகுந்த பொறுப்புடன் திறம்பட, அழகுற அச்சேற்றித்தந்த கண்ணன் அச்சகத்தினர்,

✲ "மறப்பது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வீகம்" இங்கு நன்றி கூறுமல் விட்டுப்போன நல்லவர்கள்,

அனைவருக்கும் இலங்கை இளங்கலைஞர் மன்ற அங்கத்தவர் சார்பாக
எமது நன்றியுணர்வைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேம்.

இணைச் செயலாளர்கள் { தனதேவி சுப்பையா
கமலமனேகரி குமாரசாமி

இலங்கை இளங்கலைஞர் மன்றம்
171/10, கோவில் வீதி,
நல்லூர்.

மறைந்த கலா இரசிகன்

வண்ணார்பண்ணை,

# T. செல்வரெத்தினம் அவர்களுக்கு

## இளங் கலைஞர் மன்றத்தினர்

## தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றனர்.



ஈழத்துக் கலையுலகம் நல்ல ஒரு ரஸிகனை இழந்துவிட்டது. 1971ம் ஆண்டு இளங்கலைஞர் மன்றம் ஆரம்பித்த நாள்தொட்டு இளங் கலைஞர்களின் எந்தவொரு இசை நிகழ்ச்சியையும் தவறாது கேட்டு, இளங் கலைஞர்களை ஊக்குவித்த சைவப்பெரியார் உயர்பண்பாளர், T. செல்வரெத்தினம் அவர்கள் இன்று எமது 6ம் ஆண்டு இசைவிழாவில் இல்லையே என்று இளங் கலைஞர்கள் ஆற்றொணாத் துயரடைகின்றனர். பெரியார் செல்வரெத்தினம் அவர்களது அகால மறைவு பொதுவாக இசையுலகத்திற்கே ஈடுசெய்ய முடியாததென்று. விலைமதிக்கமுடியாத பெரியாரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினர்க்கும் எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக

இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*Space Donated by:*

**PENINSULA GLASS WORKS**

**Stanley Road, Jaffna.**

☎ 7657

*With the best Compliments of :*

# S. Sinnathurai & Bro.,

39, K. K. S. Road,

JAFFNA.

284 & 418

FOR ANYTHING AND EVERYTHING IN

# JEWELLERY

DIMONDS OF THE BEST QUALITY
ALWAYS IN STOCK

**ORDERS PROMPTLY EXECUTED**

*Visit :*

# RANEE JEWELLERS

"R. G. BUILDING"

**63, KANNATHIDDY, — JAFFNA.**



☎ 7544

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்

**தங்க வைர நகைகளை**

திருப்தியுடன் பெறுவதற்கு உகந்த இடம்

# ராணி ஆபரண மாளிகை

"ஆர். ஜீ. பில்டிங்"

63, கன்னுதிட்டி, — யாழ்ப்பாணம்.

☞ ஆடர் நகைகள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.



கண்ணன் அச்சகம், நல்லூர்